133

# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகு XI | காளயுக்தி௵ ஐப்பசி௴ :: 1918-௵ நவம்பர்௴ | பகுதி 5

## வஸந்த காலம்

### THE SPRING SEASON

கலக்கமுற விளவேனிற் கலகமெழுந்
திடும்பசுந்தண் காவு தோறுஞ்
சிலைக்கணின் நாண் முறுக்குவபோல் தென்றலின்பின்
சுழல்அளிகள் சேர ஓட
உலைக்கனலில் கருங்கொல்லன் சிறுகுறட்டால்
தகடுபுரிந் தொதுக்கி மாரன்
கொலைக்கணைகள் சமைப்பனபோல் குயில்அலகால்
பல்லவங்கள் கோது மாலோ.

செங்காவி செங்கமலம் சேதாம்பல்
தடந்தொறுமுத் திக ளாகப்
பைங்காவின் நெடுஞ்சினைக்கைம் மலர்நறுந்தே
னுகுதிகள் பலவும் வீழ்க்க
உங்கார மதுகரங்கள் ஓங்காரச்
சுருதியெடுத் தோத வேள்வி
வெங்காமன் இரதியுடன் புரிந்துதன
தென்றலந்தேர் மேற்கொண் டானே.

கொண்டலெழ மின்னுடங்கக் கொடுஞ்சாபம்
வளைவுறச்செங் கோபந் தோன்ற
வண்டளவு நறுங்குமிழும் வண்டணிகாந்
தளுமலர மலைகள் தோறும்
தண்டரள அருவிவிழத் தையலார்
வடிவுதொறும் சாயல் தோகை
கண்டுநமக் கிளவேனில் கார்க்கால
மானதெனக் களிக்கு மாலோ.

பாராமல் நகையாமல் பாடாமல்
ஆடாமல் பாதம் செங்கை
சேராமல் முகராகம் வழங்காமல்
இகழாமல் செவ்வா யூறல்
கோராமல் நிழலதனை நிகழ்த்தாமல்
மலர்ந்தழகு நிறைந்த நீழல்
ஆராமம் தொறும் தங்கள் அவயம்போல்
வனகொய்தார் அணங்கு போல்வார்.

மாற்றுத பனிநீரான் மான்மதகுங்
குமமலைய வாசச் சந்தின்
சேற்றுலச் சோலைஎலாம் செங்கழுநீர்த்
தடம் போன்ற சிந்தைத் தாபம்
ஆற்றுத காதலருக் கமுதான
இளநீரால் அடர்ந்த பூகத்
தாற்றுலம் மரகதச்செந் துகிராலப்
பொழில்போன்ற தடங்களெல்லாம்.

நெடுவேனில் புகுதரமேல் இளவேனில்
அகன்றதற்பின் நிகரில் கஞ்சப்
படுவேய்வெள் வளையமுந்தண் பட்டால
வட்டமுஞ்செம் படீரச் சேறு
முடுவேய்சித் திலத்தொடையும் ஊடுறுமண்
டபத்தடமும் ஒழுகி நீண்ட
வடுவேய்கண் மடந்தையர்க்கு மகிழ்நருக்கும்
அமைந்தனவான் மனைகள் எல்லாம்.

மாரவசந் தனையகன்று வயங்குறுவெங்
கோடையினுன் மறுகி யாற்று
தாரமணி மதுமலரில் ஆவடங்
களிற்பனிநீர் ஆரச் சேற்றில்
ஈரநெடுங் குழலிசையில் இயங்கியசா
மரக்காற்றில் இளநி லாவில்
போழலும் புகுந்ததெனப் பிணங்கினர்
தங்கேள்வர்ப் பிரிந்த மாதர்.

கோடைவெயில் சுடச்சுடமெய் கொளுந்தியிறந்
தனப்போலக் கொண்டல் கோடை
வாடைசிறு தென்றலெனும் மாருதங்கள்
எம்மருங்கும் வழக்க மின்றி
ஆடையில்வெண் சாமரத்தில் ஆலவட்டத்
தினில் உயிர்ப்பில் அழகார் நெற்றி
ஓடைமுக மதகயத்தின் தழைமசெவியில்
பல்லிறகில் ஒளித்த மாதோ.

---

உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணலாமா?

விவேக போதினி

தொ.11] காளயுக்திஞு ஐப்பசிமீ [ப. 5

# பாம்பின் வாய் பிழைப்பு

## OUT OF THE DRAGON'S MOUTH

புன்புயங்க வாயதியாப்போந்தசிறுர் துன்பறுப்பான்
அன்புமுந்த பாய்ந்தங் கிளவில்வளர்ந்-தன்றவுணன்
மொடிரிய நீண்டான் முளரிபதச் செங்கறவக்
காடுரியக் கண்டார் கழல்.

ஸர்வ லோகங்களின் வெளிப்பிரபாவமான இயற்கையின் பொலிவையே ஸ்ரீ கிருஷ்ணரது பாலபருவம் வெளிக்காட்டுமென்பது தவறாகாது. அவ்வியற்கையின் உள்ளூறத் தோன்றி விளங்கும் அற்புத சக்தியே அவரது திவ்யத் திருவிளையாடல்களும்என்பது அதிசயமாகாது. எவ்வாறு ஆண்மையானது எத்தகைய நிலத்திலும் உரங்கொண்டு செழித்தோங்கி வளருமோ, அவ்வாறே கண்ணனும், தமதுயிர்க்குப் பல தடைகள் வரினும், அவற்றிலும் தனக்கேற்ற பெருமையையே நாடி வளர்ந்தனர். காலங் கடப்பினும் கதிரவன் கதி பேதப்படாததுபோல, அவர் தமது சிற்றுருவி லிருந்து தெய்விக தேஜஸானது என்றும் எங்கும் பரவும்படி நடந்துவந்தனர். ஆனால் அந்தத் தேஜஸை ஊனக்கண்ணார் கவனிப்பது அஸாத்தியமாயினும், ஞானக்கண் படைத்தவர் காணாதிருக்கவில்லை. மாயையால் மயங்கியவர்க்குக் கண்ணனது செயல்கள் எவ்வாறு பயத்தையே விருத்திசெய்தனவோ, அவ்வாறே அறிவாளிகளின் ஹ்ருதயத்துள் அந்தச் செயல்கள் அளவு கடந்த அன்பைக்குடிகொள்ளுமாறு செய்தன. அவ்வன்பானது வரம்புகடந்து ததும்பி வழிந்திற்றென்பது திண்ணம். பூதனையின் வதம், வண்டிக்கால் அஸுரன் மடிந்தது, திருணாசுரன் கதி, மரங்களின் முறிவு—இவற்றையெல்லாம் எண்ணிய ஜனங்கள், கண்ணனிடம் ஒருவித அன்புகொண்டனரென்பது வெளிப்படை. யமன் வாயிலிருந்து பலமுறையும் வெளிப்படுவதல்லாமல், தன்னை எதிர்த்து வரும் பெரும்பகையெல்லாம் பூண்டோடு அழியும்படியாகச் செய்யும் அந்தக் குழந்தையிடம், அவர் ஏதோ தெய்விகம் விளங்கியதாகவே நினைத்தனர். ஆகவே, ஞானிகளும் பாமரரும் அக்குழந்தையிடம் ஓர்விதப் பிரியமும், மனத்தைவிட்டு நீங்காத அளவு கடந்த பக்ஷமும் கொண்டனர். அதனால் அதுவரையும் கோகுலத்தில் நடந்த ஸம்பவங்களை எண்ண எண்ண அவர்க்குக் கோகுலத்திலிருப்பது தகாதென்பட்டது. குழந்தைகளின் நன்மையை உத்தேசித்த அவர்கள் கோகுலத்திற்கருகாமையிலுள்ள பிருந்தாவனத்திற்குப் போக எண்ணினர்; "கோகுலத்தின் நன்மையை விரும்பிய நாம் யாவரும், இவ்விடத்தைவிட்டுப் போதலே உசிதம். குழந்தைகளைக் கொல்லவென எத்தனை இடையூறுகளிங்குநடந்தன? இச்சிறு குழந்தை பூதனை விஷத்திலிருந்து தப்பியது; ஹரியின் அருளால் அவ்வண்டி அதன்மேல் விழாது முறிந்தது; இங்குதான் அப்பாழான அஸுரன் சுழல்காற்றுருக்கொண்டு ஆகாயத்தில் எழும்பிக் குழந்தையைச் சுழற்றியது; அப்படு பாவி கல்மேல் விழுந்ததும் தெய்வாதீனமாய்க் குழந்தை பிழைத்தது. இவ்விடத்திலிருப்பது அதன் உயிர்க்கே ஹானியாக விருக்கும். மருதிடைத் தவழ்ந்து இக்குழந்தை பிழைத்ததும் அதிசயம். இனி வேறு இடையூறு ஏற்படுமுன் இவ்விடத்தை விட்டுப் பிருந்தாவனம் அடைவதே தகுதி" என அவர் நிச்சயித்தனர்.

கோபாலர்கள் யாவரும் கோகுலந் துறந்து பிருந்தாவனம் அடைந்தனர். அது கோவர்த்தன மலையி னருகாமையில் யமுனையாற்றோரம் உள்ளது. அவ்விடம் வஸிக்கத் தக்க இடத்தை யவர் செவ்வனே ஏற்படுத்திக் கொண்டு, ராமகிருஷ்ணர்களது திருவிளையாடல்களை நினைந்து நினைந்து மனம் பூரிப்பர். அவ்விருவரும் வரவர வளரவே, அவரது இனிய மழலைச்சொல்லும், பிள்ளைக் குறும்பும் அவ்வூர்க்கே உவகை தந்தன. வயது வளர, அவ்விருவரும் இடைப்பிள்ளைகள்போல மாடு

உடம்பு போனாலும் போகிறது கையைவிட்டால் போதும்.

களையும் கன்றுகளையும் மேய்க்கத் தலைப்பட்டனர். அநேக விளையாட்டுச் சாமான்களுடன் காட்டில் இடைச்சிறுவரோடவர் விளையாடுவர்; காற்பந்து எறிந்து குதிப்பர்; மூங்கிலையொடித்துப் பொள்ளலிட்டுப் புல்லாங்குழலூதுவர்; கிண்கிணி அணிந்த கால்கள் கலீர் கலீர் என்னும்படி சிலவேளை கூத்தாடுவர்; சில ஸமயம் மாடுகள் போலவும் கன்றுகள் போலவும் உருக்கொண்டு அவற்றைப் போல் அபிநயித்து விளையாடுவர், போராடுவர்; அக்காட்டின் அழகிய காட்சியில் ஈடுபட்டவர் போலக் காட்டிக்கொண்டு மயங்குவர்; ஸாதாரணப் பிள்ளைகள்போல வனமுழுதும் ஸஞ்சரிப்பர்.

நிற்க, கோகுலத்தை நந்தன் ஆதியர் விட்டதைக் கேட்ட கம்ஸன் சும்மாவிருக்கவில்லை. அத்தெய்விகக் குழந்தையை யல்லாமல் வேறெதன்மேல் அவன் எண்ணஞ் செல்லும்? இயற்கையில் இனம் இனத்தோடு சேருமெனச் சொல்வதுண்டானாலும், பழக்கத்தில் வேறாகவே விளங்கும். காந்தத்தின் மாறுத்ருவங்களே சேர்கின்றன; மின்சாரத்திலும் அப்படியே; மோஹமெழும்புவது மவ்விதந்தான். ஆகவே கம்ஸன் தனக்கெதிரியாக வரக்கூடிய சிறுவனிடமே கவலையாயிருந்தால், அது பிராணாபிமானத்தாலேயே யல்ல; மற்று மனத்தின் அமைப்பினாலேயு மாகும். எனவே அவன் வேவுகாரர்களால் பிருந்தாவனத்தில் கோபாலர் வஸித்து வருவதைக் கேட்டதும், அப்பாழுங் குழந்தையை ஒழிக்க ஏற்பாடு செய்ய ஒரு அஸுரனை அங்கு விடுத்தான்.

அவ்வஸுரன் கிருஷ்ண பலராமர்கள் யமுனைக்கரையில்மாடுமேய்ப்பதைக்கண்டு, கன்றுபோல உருவங்கொண்டு அம்மாட்டு மந்தையுள் மயங்கிக் கிடந்தான். அதைக் கண்ட கிருஷ்ணர் அக்கன்றைச் சுட்டிப் பலராமருக்குக் காட்டினர்; ஒன்றும் அறியாதவர்போல அதன் அருகுசென்று, அதன் பின்கால்களையும் வாலையும் கொண்டு அதைப்பற்றி, அசைத்துக் குலுக்கிக்குலுக்கி ஆட்டி, வழியேயிருந்த விளாமரத்தின்மேல் தூக்கி எறிந்தார். அந்தத் தாக்கலைத் தாங்கமுடியாது, அம்மரம் அக்கன்றின்மேலேயே முறிந்துவிழ, அவ்விராக்ஷஸன் உயிர்நீங்கிப் பொத்தெனக் கீழே விழுந்தான். அதைக் கண்ட ஆயச்சிறுவர் "நன்று, நன்று" எனக் கைகொட்டி யார்த்தனர். அவர் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. வேலெறிந்து மலை பிளந்த குமரன்போலவே, கன்றெறிந்து மரம்பிளந்தானெனக் கண்ணனை யாவரும் கொண்டாடினர்; தேவரும் துதித்துப் பூமாரி பெய்தனர்.

ஆனால் கம்ஸனது ஊக்கம் குறையவே இல்லை. அவனது அன்பனான பகாஸுரன் கொக்கு உருவங்கொண்டு, ஒரு நாள் மாடுகளை மேய்க்கவரும் ராம கிருஷ்ண கோபாலர்களைக் கொல்லக் குளக்கரையில் காத்திருந்தான். கண்ணன் அங்கு வந்ததும் சட்டென அவரை அவ்வஸுரன் விழுங்கிவிட்டான். கோபாலர்கள் இடிவிழ மயங்கினவர்போல மயங்கிக் கிடந்தனர்; பலராமரும் மூர்ச்சித்து விட்டனர். எனினும் அக்கொக்கின் வாய்க்குள் இருந்த அந்தத் தெய்விகச் சிறுவன் பெரும் அக்கிகோளம்போல அதன் தொண்டையுளிருந்து, அதை வெகு உக்ரமாகச் சுட, அதைத் தாங்க முடியாத அவன், வாயுள் இருந்த சிறுவனை வெளியே கக்கி உமிழ்ந்தான். சிறிதும் ஊறு அடையாமல் கண்ணன் முன்னிலும் அதிகப் பிரகாசத்துடன் விளங்குவதை அவன் கண்டான்; மனங்கொதித்தான். எனவே, அவன் கிருஷ்ணபகவானைத் தனது அலகினால் கொத்திக்கொத்திக் கொல்ல யத்தனிக்க நெருங்கினான். விளையாட்டாகவே, அந்தப் பகாஸுரனுடைய மூக்கைக் கிருஷ்ணர் வெகு லாகவமாகப் பிளக்கக் கோபாலர்கள் அவரை வாயார வாழ்த்தி வணங்கினர். அக்கால், துந்துபி முழக்கித் தேவரும் களித்தனர்.

இச்செய்திகள் பிருந்தாவனத்தில் பரவவே, கோபாலர்கள் ஆண்பெண் அடங்கலும் கண்ணனிடம் அளவுகடந்த அன்புகொண்டனர்; "இச்சிறுவன் உயிரைக் கவர எத்தனை ஸம்பவங்கள் நடந்தன. எனினும் அவற்றை இவன் கடந்து விளங்குகின்றனன். அவனைக் கொல்லவரும் கொடியவர் எவரும், நெருப்பிற்பட்ட ஈயைப் போலப் பொரிந்து விடுகின்றனர். அகோ! தம்மைத்தாமறிந்தபெரியோர்சொன்ன மொழிகள் என்றும் பொய்த்திலது! அன்று கார்க்யர் சொல்லிய வாக்கும் பலித்ததன்றே!" என்று அவர், மனங்களித்து கண்ணனுக்குத் தீங்கு இழைக்க எவனாலும் முடியாதென்ற முடிந்த அபிப்பிராயத்திற்காளாய் விளங்கினர்.

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

ஆனால் கம்ஸன் அப்படி விளங்கவில்லை. கண்ணனைக் கொல்வதாகக் கங்கணங் கட்டி உழைத்து வந்தான். பின் தனக்குப் பகையாக வரக்கூடியதை முளையிலேயே நசுக்க அவன் முயற்சித்து வந்தான். அவன் ஏன் அவ்வாறு கண்ணனைத் தன் பகையாகப் பாராமலே பாராட்டவேண்டும்? யாவர்க்கும் இனிய கண்ணன் அவனிடம் அன்புகொள்ளாரா? இக்கேள்விகள் ஸரியானவை யல்லவா?—என்பன சில ஸமயங்களில் நமது மனத்தை வாட்டலாம். இவற்றிற் கெல்லாம், வீண் தார்க்கீக வாதமிட்டுப் பதில்தருவது பொருந்துமா? அனுபவ ஞானமே பற்றுக்கோடாயிருந்து பயன் தரும் அன்றோ? வைரம் பாய்ந்த மரத்தை வளைக்க ஏன் யத்தனிக்கக் கூடாதெனக் கேட்டால், வளைக்கச் செய்யலாம் என வாதித்தாலும், அது அனுபவத்தில் முடியாதென்பது திண்ணம். பலநாளாய் உரங்கொண்டு தழைத்து, அவன் மனத்துள் ஆழமாக வேர்விட்டு வளர்ந்து வைரம்பாய்ந்த கொடுமை விருக்ஷத்தை, வளைத்து மேலெழும்பாது அடக்கி வைப்பது முடியா தென்பதை எவரும் ஒப்புவர். அவ்வாறு யத்தனித்தாலும் அம்மரம் வேறொரு பாகத்தில் செழித்து மேற் கிளம்பலாம். அல்லது, அதைக் கட்டுப்படுத்திய தடை நீங்கியதும், நிமிர்ந்து ஓங்கிவளரலாம். எனவே, கம்ஸனை நல்வழிக்குக் கொண்டு வருவதென்றால், அவனது பல நாள் பெரும் வினை இடந்தராது. அதனைக் கிருஷ்ணர் நன்குணர்வர். அவ்வாறு அவர் உணரவில்லையெனில், அவர் அறிவுக்கே குறையன்றோ? வீண்பிரயாசையில் தாம் தலையிடுவது தகாதெனவே அவர் விடுத்தனர்போலும்!

மற்றுத் தமது அன்பின் பெருக்கினால் தன்னையே அவன் நினைக்குமாறு அவர் செய்து வந்தார். அவன் அனுப்பிய அஸுரரை எல்லாம் அவர் கொன்றுவருவதைக் கண்ட அவன் ஏன் அக்குழந்தையின் பெருமையில் ஈடுபடக் கூடாது? அவனது பழைய கருமத்தொகுதியோ அல்லது மயக்கவழியின் நிலையோ, எதுவாயினும், அவன் மனத்தில் நல்லெண்ணங்கள் தோன்றி விளங்க அது இடந்தரவில்லை. கடவுள் பரிபூர்ண கிருபையே உருவெடுத்தவராயினும், ஒவ்வொருவரும் தாம்தாம் செய்யும்செயல்களுக்குத்தாமே உத்தரவாதமாக இருக்கவேண்டிவரும். அக்கருமசேஷமே ஒருவேளை கம்ஸனது மனதைக்கலக்காது, மேலும் மேலும் கண்ணனிடம் பகை பாராட்டி அவரை யழிக்கப் புதுப் புது வழிகளைத் தேடத் தூண்டியது போலும்! அவன் மனம் வேலைசெய்து கொண்டே இருந்தது.

ஒரு ஸமயம், கோபாலர்களுடன் காட்டிற்குச் சென்று, காலையில் அங்கு வனபோஜனஞ் செய்துவேடிக்கையாகஇருக்கவேண்டுமென்ற எண்ணம் கண்ணனுக்கு உதித்தது. எனவே, அவர் தமது கையிலிருந்த புல்லாங்குழலை இனிக்க ஒலித்துத் தம் நேயர்களை எழுப்பிக் கன்றுகளுடன் வெளிக்கிளம்பினார். அவரிடம் அன்புகொண்ட கணக்கில்லாக் கோபாலச் சிறுவர்கள் அநேகாயிரம் கன்றுகளை யோட்டிக்கொண்டு கூட வந்தனர். தாம்பும், கொம்பும், குழலுங்கொண்ட அவர், வழியிலிருந்த புஷ்பங்களைப் பறித்துத் தமக்குத் தம் தாய்மார் செய்திருந்த அழகிற்கு அழகு செய்து, வேடிக்கையும் விநோதமுமாகப் பேசிய வண்ணமாகவே, விளையாடிக்குதித்து மாடுகளை மேய்த்துக்கொண்டு நடந்தனர். அவரதுபிள்ளை விளையாடல்களுக்கு அளவே யில்லை. ஒருவரது தாம்பைப் பிரித்து எறிந்து குறும்பு செய்தல்; ஒருவரை மற்றொருவர் மீது தாக்கிக் குதித்தல்; பின்னால் குறும்பு செய்து முன் வந்து ஒன்றும் தெரியாதவர்போலப் பாசாங்கு செய்தல்; பிள்ளை மொழிகளால் ஒருவரையொருவர் ஏசல்;சிறிதும் விரோதபாவமின்றிக் கட்சி கொண்டு குறும்பு செய்தல்;—இவை முதலிய கணக்கிலாப் பிள்ளை விளையாட்டுகளுடன் அக்காட்டின் பேரழகை யனுபவித்து "நான் முன்", "நான் முன்" என்றுகொண்டு அடர்ந்தக் காட்டுள் அவர் முந்தி நடந்தனர். அப்போது சிலர், தாரையூதி அக்காட்டில் நாதம் எழுப்புவர்; சிலர் குழலூதிக் கன்றுகளைக் குதிக்கச் செய்வர்; சிலர் பக்கத்திலிருந்து எழும்பும் கோகில ஸ்வரத்துடன் மயங்கப் பாடுவர்; சிலர் தேனீக்களின் ரீங்காரத்துடன் ச்ருதி கூட்டிக் களிப்பர். சேஷ்டையில் ஆவல் கொண்ட சிறுவர், பட்சிகளைத் துரத்தியும், அன்னங்களைப் பற்றியும், மரத்தில் தாவிக்கிளைகளிலிருக்கும் குரங்குகளின் தொங்கும் வால்களைப் பற்றி யீர்த்தும் களித்துக் கூத்தாடுவர். சிலர் மரமேறிக் குதிப்பர்; சிலர்

உடையவன் பாராப் பயிர் உருப்படுமோ?

ஒருவரையொருவர் அழகுகாட்டி ஆர்ப்பரிப்பர். சிலர் நீரருகுவந்து தவளைமீது கற்கள் எறிவர்; சிலர் தவளைகளைப்பிடிப்பர்; அவற்றைப்போலக் கத்துவர். சிலர் தமது சாயையைப் பார்த்துச் சிரிக்க, சிலர் அங்கு எதிர்பேசும் பிரதித்வனியைக் கவனிப்பர். இவ்வநந்த வைபவத்தில் கண்ணபிரான் தமது நேயர்களுடன் விளங்குவதை எவரும் கவனித்திலர் போலும்! கவனித்திருப்பின் அடைதற்கரிய அப்பரம் பொருள், தமது திருவடி நிலந்தோய நடந்து தமக்குக் காட்ட வந்த பேராநந்தக் காட்சியைக் கண்டு களித்திருப்பர் அல்லவா?

அவ்வாறு காணினும், கண்ணிருந்தும் காணாதவரும் உண்டென்பதும் இருக்கும்; அல்லவா? மயக்கத்துடன் விளங்குபவர்க்கு அத்தெய்விகக் காட்சி இன்பம் தருமோ? தராது; அது நிச்சயம். ஆகவே, கம்ஸனது ஏவலால் அங்கு நடப்பனவற்றை எல்லாம் கண்டுகொண்டிருந்த அகாஸுரன் மனத்தில் வெறுப்பே உதித்தது. இவன், பூதனை பகன் இவரது தம்பி. தன் உடன் பிறந்தவரைக் கொன்றது சிறு குழந்தையானாலும், அதனிடம் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று அவன் உள்ளம் கொதித்தது; அதில் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. எனவே அவன் ஒரு பெரிய பாம்பின் உருவங் கொண்டு, உருவில் பெருத்து, ஆகாயமும் பூமியும் தாக்கும்படி தனது வாயைப்பிளந்து திறந்துகொண்டு கண்ணனைக் கோபாலருடன் உட்கொண்டுவிடக் காத்திருந்தான். பூமியின் மட்டத்தில் மயங்கியிருந்த அவ்வாயை ஒரு குஹை என்றெண்ணிக் கோபாலர்கள் அதனுள் விளையாடிக் கொண்டே நுழைந்தனர். ஆனால் அப்பாம்பு, வாயை மூடாது தனது முன்னோரைக் கொன்ற ஞாபகத்தோடு கண்ணனது வரவை எதிர்பார்த்திருந்தது. நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்த கண்ணன், தமது பரிவாரங்களைக் காணாது, எதிரிலிருந்த பாம்பின் பேழைவாயுள் விளங்குவதைக் கண்டதும், அன்பரது துயரத்தைத் தீர்க்கவெனத் தாமும் அவ்வாயுள் வீழ்ந்தனர். உடனே அப்பாம்பு வாயை மூடிக் கொண்டது. அப்பாம்பின் ஜாடராக்கினியில் இட்ட சமித்தெனப் புகையாது, தழைக்க உள்ளங் கொண்ட அத்தெய்விகக் கண்ணன், தமது பிரபாவத்தினால் தமது உருவிலும் அளவிலும் வளர வாரம்பித்தனர்; மனங் குன்றிய தேவரது கூக்குரலையும், கம்ஸனுதியாத களிப்பையும் ஒழிக்க அவர் வரவரப் பெருத்து வளர ஆரம்பித்தனர்; அப்பாம்பின் வயிற்றுள் ஒரு வருஷ காலம் தமது நண்பருடன் அவர் விளையாடி வளர்ந்து வந்தனர்.

கண்ணனது அளவு பாம்பின் பரிமாணத்தைக் கடக்க வாரம்பித்ததும், அதன் கண்விழிகள் வெளிபிதுங்கின; மூச்சுத் திணறியது; தலை சுழன்றது; வயிறுவெடித்தது. தெய்விகக் கண்ணனும் தமது அருள்பிரபாவத்தினால், மெலிந்த கோபாலர்களைக் கிளைக்கச் செய்து வெளிவர, அப்பாம்புருவாயிருந்த அஸுரனது ஆத்மாவானது, பத்துத்திசைகளிலும் சோபை விளக்கிவளர்ந்த அப்பரந்தாமனுடலுள் மயங்கியது. ஆனால் அவ்வகாஸுரனது உலர்ந்த தோல் நெடுநாள் அப்பிருந்தாவனத்தருகு பிள்ளைகளின் விளையாட்டுக் குகையாகவே விளங்கி வந்தது.

நிற்க. பாம்பின் வாயுள் ஒரு வருஷம் கோபாலர் பதுங்கிக் கிடக்கப் பிருந்தாவனத்தில் சிறிதும் கவலை ஏற்படாது விளங்கியதும் அற்புதம் போலும்! கவிவாக்கிற் கிணங்க:

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற லரிது.

## சிவஞான சுவாமிகள்

### SIVAJNANA SWAMIGAL

சிவஞான சுவாமிகள் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவிலே பாவநாசமென்னும் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே சைவ வேளாளர் குலத்திலே பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் ஆநந்தக் கூத்தர்; தாயார் பெயர் மயிலம்மையார். இவருக்கு இளமையிலிட்ட இயற்பெயர் முக்களாலிங்கர் என்பர். இவர் பாடசாலையிற் கல்வி கற்கும் இளமைப் பருவத்திலேயே குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்தவராய்ப் பாடுந்திறமும் அமையப்பெற்றி

உட்கார்ந்து அல்லவோ படுக்கவேண்டும்.

ருந்தனராதலின், அப்போது அவ்விக்கிரமசிங்கபுரத்துக்குச் சென்ற திருவாவடுதுறைத்தம்பிரான்கள் சிலரைக் கண்டு, துறவின்மேல் இச்சைகொண்டு, அவருடன் திருவாவடுதுறை சென்று, அங்கே ஞானதேசிகராய் வீற்றிருந்த பின்வேலப்ப தேசிகர் என்பவரிடம் சிவதீக்ஷை முதலியனபெற்றுத் துறவியாயினர். இவர் திருவாவடுதுறையில் இருந்துகொண்டு தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், சமய நூல்களையும், வடமொழியையும், அதிலுள்ள சமய சாஸ்திரங்களையும், தருக்க நூல்களையும் நன்கு கற்றுப் புலமை நிரம்பப் பெற்றனர். சைவசித்தாந்த நூல்களை அங்கேயே தமது ஞானாசிரியராகிய பின்வேலப்பதேசிகரிடத்தில் சாங்கோபாங்கமாகக் கற்றுக்கொண்டனர்.

பின்னர் இவர் திருவாவடுதுறையை விட்டு வெளிப்போந்து சென்னைக்குச் சென்று, சென்னையிலும், அதன் அயலூர்களிலும் காஞ்சிபுரத்திலும் பலநாள் வசித்தனர். இங்கு வசிக்கும்போதே இவர் காஞ்சிப் புராணம் முதலிய நூல்களைச் செய்தனர். இவர் கோயம்புத்தூர்க் கருகிலுள்ள பேரூரிலும் சிலநாள் வசித்தார் என்பர்.

இவர் பிற்காலத்துப் புலவர்களுள் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்குபவர்; தமிழ் இலக்கண அறிவிலும், சைவசித்தாந்த நூலுணர்ச்சியிலும் மிகச் சிறந்தவர்; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளும் பாடுந்திறமும், மொழிபெயர்க்குந் திறமும், சுருக்கியும் விரித்தும் உரையெழுதுந் திறமும், பிறரது மதத்தைக் களைதலும் தமது மதத்தை நிறுத்தலும் பிறர் நூற்குற்றங் காட்டலும்மைய எதிர்நூல் செய்யும் திறமும் வாய்ந்த பெரும் புலமையாளர்.

இவர் இயற்றிய நூல்களுள் முக்கியமானவை:—காஞ்சிப்புராணம் முதற்காண்டம், சோமேசர் முதுமொழி வெண்பா, தர்க்க சங்கிரக உரை, சிந்தாந்தப் பிரகாசிகை, சிவஞானபோத மாபாஷியம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியாருரை முதலியன.

இவருக்குத் தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பன்னிருவர் மாணாக்கர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த புலவராய் விளங்கினர்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இப்பெரும் புலவர் எப்போது பிறந்தார் என்பதாவது எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தாரென்பதாவது ஒன்றும் தெரியவில்லை. திருவாவடுதுறை ஆதீனத்தில் வழங்கிவரும் ஒரு கவியால், இவர் கி. பி. 1785-க்குச் சரியான விசுவாவசு வருஷம், சித்திரை மாதம் ஞாயிற்றுக்கிழமை, ஆயிலிய நக்ஷத்திரத்தில் திருவாவடுதுறையில் தேகவியோகமாயினர் எனத் தெரிகின்றது. அக்கவி வருமாறு:—

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
உன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னும்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்.

இதனால் இவர் இருந்தது இற்றைக்கு நூற்று முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன் என்பது பெறப்படும்.

## நிலக்காற்றும் கடற்காற்றும்

### LAND AND SEA BREEZE

காலையிலும் பகலிலும் நிலத்திலிருந்து சமுத்திரத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்கு நிலக்காற்று என்று பெயர். மாலையில் சமுத்திரத்திலிருந்து நிலத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்குக் கடற்காற்று என்று பெயர். இவ்விருவகைக்காற்றும் ஒவ்வொரு தினமும்மாறி மாறி யடிக்கும். கடற்காற்று தேகதுக்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரத்தக்கது, பகலில் சூரிய உஷ்ண மிகுதியினால் வாடித் துன்பப்படும் உயிர்வர்க்கங்கள், மழையை எதிர்பார்த்து நிற்கும் பசும் புல் முதலிய பயிர்போல, கடற்காற்றை எதிர்பார்த்து நிற்கின்றன. நிலக்காற்று அவ்வளவாகத் தேகத்துக்கு ஆரோக்கியமானதல்ல. மாறிமாறி வீசும் இவ்விருவகைக் காற்றுகள் உண்டாவதற்குக் காரணங்களைச் சற்று கவனிப்போம்.

பகலில், சூரியோதய காலமுதல் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள்யாவும் சூரியவெப்பத்தில் காய்ந்துவெகு சீக்கிரத்தில் கொதிப் படைகின்றன. அப்படிக கொதிப்பேறியபொருள்களுக்குச்சமீபமாயுள்ள அசையாத காற்றும் உஷ்ணமேற வெப்பம்

உட்கார்ந்தவனைக் கட்டமாட்டாதவன் ஓடுகிறவனைக் கட்டுவானா?

அடைகின்றது. அவ்வாறு வெப்பமடைந்த காற்று, கனத்தில் குளிர்ந்த காற்றைக் காட்டிலும் குறைவதனால் மேலெழும்பி வெளிப்பரப்பில் போய்விடுகின்றது. அதே காலத்தில் சமுத்திரத்திலுள்ள நீரும் சூரிய உஷ்ணத்தினால் வெப்பம் அடைந்துகொண்டு வருகிறது. ஆனால் கல், மண் முதலிய கனத்த பொருள்கள் உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கிரஹித்துக்கொண்டு வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீர் உஷ்ணத்தைக் கிரஹிக்கிறதில்லை. ஆகையால் அவற்றைப்போல அவ்வளவு சீக்கிரத்தில் வெப்பமாகிறதில்லை. திருஷ்டாந்தமாக, கொஞ்சம் மணலையாவது சில கற்களையாவது ஒரு புறத்திலும், தண்ணீரை ஓர் பாத்திரத்தில் மற்றொரு புறத்திலும் வெய்யிலில் ஒரு மணி நேரம் வைத்துப் பார்ப்போமானால், அந்தக் கற்களுக்கும் மணலுக்கும் உண்டாயிருக்கும் உஷ்ணக் கொதிப்பு எவ்வளவோ, அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட, அந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீருக்கு உண்டாகாமலிருப்பதை நாம் நன்றாக நேரில் அறியலாம். அந்த ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே, மேற்படி தண்ணீரின் உஷ்ணத்தையும் அது வார்க்கப்பட்டிருக்கின்ற பாத்திரத்தின் உஷ்ணத்தையும் தொட்டு ஒத்திட்டுப் பார்க்கையில், தண்ணீரை விட கனத்த பொருளாகிய அந்தப் பாத்திரம் அதிக வெப்பமாயிருப்பதை நாம் பிரத்தியக்ஷமாய் அறியலாம். ஆகையால் சமுத்திரத்திலுள்ள ஜலத்தைவிட நிலத்திலுள்ள கல், மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் சீக்கிரம் வெப்பமாய் விடுகின்றன. அப்படி வெப்பமாய்ப் போகும் நிலத்திலிருந்து மேலெழும்பிச் செல்லும் நிச்சலவாயு இருந்த இடத்தை நிரப்பும்படி சமுத்திர ஜலத்தின் மேற்புறமாயுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு நிலத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கிறது. இந்தப்படிச் சமுத்திரத்திலுள்ள நிச்சலவாயு நிலத்தை நோக்கி மோதும்போதுதான் அதைக் கடற்காற்று என்று நாம் அழைக்கிறோம். அது கடலினிடத்திலிருந்து பூமியின் பக்கமாக அடிப்பதால்தான் அதை நாம் அப்படி அழைப்பது என்பது அப்பெயரிலிருந்தே தெரியுமல்லவா?

உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரமாய் நிலத்திலுள்ள கல், மண் முதலிய திண்ணிய பொருள்கள் கிரஹித்து வெப்பமாகின்றனவோ, அவ்வளவு சீக்கிரமாய் அவை உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்ந்துபோய் விடுகின்றன. அந்தப்படி அவைகள் சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பே குளிர ஆரம்பிக்கிறபடியால், வெகு சீக்கிரத்தில் அவைகள் குளிர்ந்து சில்லிட்டு விடுகின்றன. சமுத்திரத்திலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தை எவ்வளவு மெதுவாய்க் கிரஹிக்கின்றதோ, அவ்வளவு மெதுவாகவே அந்த உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்கிறது. ஆகையால் சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு மறுநாள் சூரியோதயம் வரையில் நிலத்திலுள்ள மண் கல் முதலிய திண்ணிய பொருள்கள் யாவும் குளிர்ந்து போயிருக்குங் காலத்தில், சமுத்திரத்திலுள்ள ஜலம் உஷ்ணமாகவே இருக்கின்றது. இரவிலும், பிராதக் காலத்திலும் சமுத்திரத்திலாவது தடாகங்களிலாவது ஸ்நானஞ்செய்ய இறங்கும்போது தண்ணீர் உஷ்ணமாயிருப்பதை நாம் அனுபவசித்தமாய்க் காணலாம். உஷ்ணமாயிருக்கும் பகற்காலத்தில் சீதளமா யிருக்கும்படியாகவும், சீதளமாயிருக்கும் இராக்காலத்திலும் பிராதக் காலத்திலும் உஷ்ணமாயிருக்கும் படியாகவும் தண்ணீருக்கு லக்ஷணத்தை அமைத்து வைத்த ஜகதீசனின் கருணையே கருணை!

இவ்விதம் கடவுள் அமைத்துவைக்கா விட்டால் உஷ்ணகாலமாகிய பகற் பொழுதில் வேறு சீதள ஸ்தானம் இல்லாமையாலும், சீதளகாலமாகிய இராக்காலத்திலும், பிராதக் காலத்திலும் வேறு உஷ்ண ஸ்தானம் இராமையாலும் உயிர்வர்க்கங்கள் என்னபாடுபடும்!

நிற்க. இராக்காலத்திலும், பிராதக்காலத்திலும் நிலத்திலுள்ள கல், மண் முதலிய யாவும் குளிர்ந்து போயிருக்கும்போது சமுத்திரஜலம் உஷ்ணமாகவே யிருக்கிறபடியால் அங்குள்ள உஷ்ணமான நிச்சலவாயு முன்னே நிலத்திலிருந்து மேலெழும்பிப்போகிறதென்று சொன்னதுபோல மேலேகிளம்பிப் போய்விடுகின்றது. அந்த இடத்தை நிரப்புவதற்காக அப்போது நிலத்தின் மேற்புறமாயுள்ள சீதளமான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கிறது. இந்தப்படி நிலத்திலுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி மோதுவதால், அதை நிலக்காற்றென நாம் வழங்குகிறோம்.

இவ்விரண்டு காற்றும் ஒன்றன் பின்னொன்றாக அடித்து உலகத்திலுள்ள உஷ்ண சீதளத்தைச் சமமாக்கிக்கொண்டு, தன்னிடம் அன்புகொள்ளாத மனிதற்குங்கூட உதவியாக விளங்குகின்றது. அவ்வாறு, கைம்மாறு கருதாது செய்யும் உபகாரத்தைக் கண்டும் நாமும் அவ்வாறே உழைக்க வேண்டுமென்பதை அக்காற்று நம்மனத்துள் பதியும்படி வீசுகின்றதல்லவா ? அதைக் கற்று நாம் ஒழுகுவதற்கு நம்மனம் இடந்தராவிடில் கண்ணிருந்தும் நாம் பெற்ற பயன் யாதோ?

---

# குழந்தைகளும், பாலுணவும்

## CHILDREN & MILK DIET

குழந்தைக்குத் தாய்ப்பாலே சிறந்த உணவு. இது இயற்கையாலமைந்தது. தாய்க்குப் பாலில்லாத காலத்து வேறு பால் உணவு தேடுவது அவசியமாகும். கழுதைப் பால், அமைப்பில் முலைப்பாலுக்கு ஸமானமான அமைப்புள்ளது. அதனால்தான் குழந்தைகள் பிறந்ததும் இப்பாலைத்தேடி அவற்றிற்குப் புகட்டுவது. அதில் கொழுப்பும், ஜீரணமாகமுடியாத மாமிஸ ஸத்தும் இல்லாமல் சிறிதே உப்பு முலைப்பாலைக் காட்டிலும் அதிகமாய் இருக்கும். ஆனால் நகர வாஸங்களில் கழுதைப்பால் கிடைப்பது பிரயாஸை. ஆட்டின்பால் தாய்ப்பாலுக்கு ஸமானமா யிருப்பதுமல்லாமல், குழந்தைகளுக்குப் பலவித வியாதிகளைத் தடுக்கும். குழந்தைகளை நேராக ஆடுகளை ஊட்டச்செய்யலாம். அது, தாயிடம் பாலூட்டுவதுபோலவே அப்போது உண்ணும்.ஸாதாரணமாக நாம்பசுவின் பாலையே குழந்தைகளுக்குப்புகட்டி வளர்த்தல் வழக்கம். இப்பாலில் மாமிஸ ஸத்தும்,தித்துப்பும், நீரும் முலைப்பாலைக்காட்டிலும் குறைவாயிருப்பதால்அதில்ஒரு சொட்டுச்சர்க்கரையும், சிறிது நீரும் கலந்து கொடுத்தல் நல்லது. நீரை அதிகமாகச் சேர்ப்பது தவறு. சுத்தமான பசுவின்பால் இரண்டு பங்கில் கொதித்து மிதமாகக் குளிர்ந்த வெந்நீர் ஒரு பங்கு கலந்து அதில் ஒரு சிறிது சீனிக் கற்கண்டுப் பொடி போட்டு குழந்தைகளுக்கு உபயோகிப்பது சிலாக்கியமானது. கூடிய வரை, ஒரே பசுவின் பாலை எப்போதும் உபயோகிப்பது உசிதமாகும். பல பசுக்களின் பாலை உபயோகித்தலால், பாலின் அமைப்பின் வேறுபாட்டால் குழந்தையின் தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாமலு மிருக்கலாம். நகர வாஸங்களில் பசுவின் போஷணையை ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். நோய் பிடித்த பசுவின் பால் குழந்தைக்கும் அவ்வியாதியை உண்டாக்கலாம். பசு அதிகமாகப் பால் கறக்கவேண்டுமென்று மணிலாக்கொட்டை, எள்முதலிய புண்ணாக்குகளை உணவாகக்கொடுக்கப்பெறும் பசுக்களின் பாலில் கொழுப்பு அதிகமாயிருப்பதால், அவற்றின் உபயோகம் குழந்தைகளுக்கு மந்தம் முதலிய வியாதிகளைப் பயக்கும். இக்காலத்தில், பாலை புட்டியில்வைத்து குழந்தைகளுக்கு ஊட்டும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதால், அப்புட்டியில் விடும்பாலில் ஒரு சிறிது சுண்ணாம்புத்தேட்டை சேர்ப்பது நலம். அது புட்டியிலிருக்கும் பாலில் புளிப்பு ஏறாமல் காக்கும். குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் விஷயத்தில் இவற்றைக் கவனிப்பது நன்மை பயக்கும்.

பாலை மிச்ரப் படுத்தல் இப்பட்டணத்தில் ஸர்வ ஸாதாரணமாக இருக்கிறது. இவ்விஷயத்தில் நாம் ஜாக்ரதையா யிருக்கவேண்டியதும் அவசியம். ஏனெனில் பாலிற்கலக்கப்படும் பொருள்கள் சில ஸமயங்களில் அளவு கடந்த தொந்தரையைக் குழந்தைகளுக்கு உண்டாக்கும். பாலைப் பாதுகாப்பதிலும் ஜாக்ரதை வேண்டும். அசுத்தமான பாத்திரங்களில் வைப்பதால் பால் கெட்டுவிடும். பாத்திரங்களைப் புளியிட்டதும் அதில் பால் வைப்பது தவறு. அப்பாத்திரத்தை நன்கு கழுவி அதிலுள்ள அழுக்கு நீரைப் போக்கித் துடைத்த பாத்திரங்களிலேயே பாலைவைப்பது உத்தமம். அப்படி வைத்தாலும் அதன்மேல் வேறு ஏதாவது தட்டினாலோ அதுபோன்ற வேறு பாத்திரத்தாலோ மூடிவைக்கவேண்டும். இல்லாவிடில், பாலில் ஈ, எறும்பு முதலியன விழுந்து அதை அசுத்தமாக்கிவிடும். இவ்விஷயங்களையும் நம்மவர் கவனிப்பது நலந்தரும்.

---

உண்ணாமல் ஊர் எல்லாம் திரியலாம், உடுக்காமல் ஒரு வீட்டுக்கும் போகலாகாது.

# இந்திய வீரத்தாய்மார்

## INDIAN HEROINES

முன்னாட்களில் மற்றதேசங்களைவிட நமது இந்தியாவானது நாகரிகத்திலும், கல்வியிலும், தன தான்ய ஐசுவரியத்திலும் சற்றும் குறைந்ததில்லை என்று சரித்திர அறிஞர்களும், மாணவர்களும் பற்பல ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிறார்கள். இந்தியாவில் வீரத்தனமும் சிறிதும் குறைவாயில்லை என்று சாதித்து இதற்கு முன்னே ஒரு வியாசம் எழுதி யிருந்தோம். எந்நாட்டிலும் வீரத்தன்மையானது செவ்வனே வேர் ஊன்றிச் செழித்து ஓங்குவதற்கு அந்நாட்டின் ஆண்பாலாரன்றிப் பெண்பாலாரும் வீரச்சுவையை அறிந்து, அதற்குத் தகுந்தபடியே தாம் தம் குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவுப்பாலுடன் வீரப்பாலென்ன, தியாகப்பாலென்ன இவைகளையும் ஊட்டவேண்டும் என்பது எளிதிற் புலப்படும். எத்தேசத்தின் முன்னேற்றத்துக்கும் அத்தேசத்தின் பெண்களின் மாட்சிமையே காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆதலின் நமது தமிழ்நாட்டுப் பெண்கள் நாகரிகம் உள்ளவர்களா என்றும், வீரக்குணம் பொருந்தினவர்களா என்றும் சற்றே கவனிப்போம்.

இவ்விஷயத்தைப்பற்றிச் சரிவர ஆராய்ச்சி செய்வதற்குக் கடைச்சங்கக்காலத்து நூல்களில் சிறந்தபுறநானூறு' என்ற நூலினின்று நாம் சில மேற்கோள்களை எடுத்துக் காட்டுவோம். பெண்கவிகளில் 'பொன்முடியார்' என்பவர், 'குழந்தையை ஈன்ற மாத்திரத்திலேயே தாயின் கடமை முடிந்தது; அவனைக் கல்விகேள்விகளில் சான்றோனாக்குவது தகப்பன் கடமை; அவன் யுத்தத்தில் உபயோகிக்கும்படியான வேலாயுதத்தை அடித்துக்கொடுத்தல் கொல்லனுடைய கடமை; அவன் நல்வழியிலேயே நடக்கும்படி பார்த்துக்கொள்ளுதல் வேந்தன் கடமை; போர்முகத்துக்குச் சென்று எதிரிகளைக் கொல்லுதல்தான் தன் மகனின் கடமை' என்று பொருள்படும்படியாய்,

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே,
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே,
வேல்வடித் துக் கொடுத்தல் கொல்லற்குக்கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ் சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்று பாடியுள்ளார். என்னே இவரது கவித்திறமை! என்னே இவரது வீரத்தன்மை! 'பெற்றவளுக்குப் பிள்ளை என்று இருந்தால் போதும்; அவன் எப்படி யிருந்தாலும் சரி' என்றுகருதும் தற்காலத்துப் பெண்களுக்கும், 'செருமுகத்துச் சென்று சத்துருவை வெல்வதற்காகவே நாம் பிள்ளைகளைப் பெற வேண்டும்' என்று கருதிய இப் 'பொன்முடியார்' போன்ற அக்காலத்துப் பெண்களுக்கும் எவ்வளவு வேறுபாடுள்ளது?

போர்த்தலத்தில் மாண்டவர்க்கு வீரச்சுவர்க்கம் என்பது உண்டு என்று மஹாபாரதத்திலும், இராமாயணத்திலுமுள்ள பலபாடல்களிலிருந்து அறியலாம். ஐரோப்பாவில் நடக்கும் இப்பெரும் யுத்தத்தில் போர் முனையில் இறந்த வீரர்களின் தீரத்தை மெச்சி, அவர்கள் இறந்துபட்ட இடத்தில் கற்றூண்களை நாட்டி, அவைகளின் மேல் அவ்வீரர்களின் ஊர், பெயர் முதலியவைகளைச் செதுக்கி வைப்பது போல நம் நாட்டிலும் பண்டைக்கால முதல் இவ்வழக்கம் உள்ளதென்பது 'தொல்காப்பியம்' முதலிய நூல்களிலிருந்து தெரிய வரும். இன்னும் வீரக் களத்தில் ஓர் வீரன் விழுந்து உயிர் துறந்தால் அது சந்தோஷத்தைத் தரத்தக்க விஷயமென்றே பாவித்தார்கள். அதற்கறிகுறியாகப் 'பூங்கணுத்திரையார்' என்னும் பெண்கவிஞர், ஓர் வீரத்தாயைப்பற்றி வருணிக்கையில், "கொக்கின் இறகைப் பார்க்கிலும் வெண்ணிறமுடைய (அதாவது மிகவும் நரைத்த) தலைமயிரையுடைய இக்கிழவியானவள் தன்மகன் போர்க்களத்தில் சத்துருவின் யானையைக் கொன்று தானும் அடிபட்டிறந்தானென்ற செய்தியைக் கேட்டதும், தான் அவனைப் பெற்றபோது எவ்வளவு சந்தோஷப் பட்டாளோ அதை விட அதிகமான சந்தோஷத்தையடைந்தாள்" என்று அருத்தம் பெற,

'மீனுண் கொக்கின் றூவி யன்ன,
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்,
களிறெறிந்து பட்டன னென்று முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே"

என்று பாடி யிருக்கிறார். தற்காலத்துப் பெண்டிரும் இவ்வீரத்தாய்மாரின் செய்கை

இராகு தசையில் வாழ்ந்தவனும் இல்லை, ராஜ தசையில் கெட்டவனும் இல்லை.

யறிந்து அவ்விதமே நடந்துகொள்வாராக!

தற்காலத்தில் நமது பெண்டிர்க்கு இராஜீய ஜனசமூகவிஷயங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்கிறார்கள். மற்றும் சிலர் 'பெண்களுக்குச் சட்டி சுரண்டுவதுதான் வேலையே யொழிய இவ்விஷயங்களெல்லாம் என்னத்துக்கு?' என்று கேட்கிறார்கள். ஆனால் முற்காலத்திலோ நமது பெண்டிர்கள் இராஜரீக விஷயங்கள் பலவற்றையும் ஊக்கத்துடன் கவனித்து வந்ததாகத் தெரிகிறது. தன்னாட்டை அன்ய அரசர்கள் பிரவேசிக்காமல் பாதுகாப்பது வெகு மேன்மையான குணமென்றும், அப்படிப் பாதுகாப்பதில் ஒருவன் உயிர் துறந்தால் பல தான தருமங்களைச் செய்தால் உண்டாகும் புண்ணியத்தைக் காட்டிலும் உயர்ந்த புண்ணியத்தை அவன் அடைகிறான் என்றும் ஓர் வீரத்தாய் கூறியுள்ளார்.

"தருமமு மீதேயாம், தானமு மீதாம்,
கருமமுங்காணுங்காலீதேயாம்—செருமுனையின்
கோள்வாள் மறவர் தலைதுமிப்ப வென்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்"

ஆதலின் நமது பெண்களுக்கு இராஜீய ஜனசமூக விஷயங்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை என்னும் விஷயம், இப்பொழுது உண்மையாயின், நாம் அவர்களுக்கு அவ்விஷயங்களைப்பற்றிப் போதிக்காமலிருப்பதின் பயனே தவிர, அவர் குற்றமன்றென்பது சட்டென விளங்கும்.

இனிப்போரில் வீரர்தங் கடமை யென்னவென்று விசாரிப்போம். நம்மவர்களுககு யுத்தத்தில் சத்துருவைக் கொன்று ஜய பேரிகை முழக்குவதே சந்தோஷத்தை யுண்டாக்கும். தன்னைப் பார்க்கிலும் சத்துரு பலிஷ்டனானால் அவனுடன் உயிருள்ள வரையில் பொருது யுத்தகளத்தில் இறப்பதே மேன்மை என்று கருதுவார்களே யொழியப் புறங்காட்டி ஓடமாட்டார்கள். அப்படிப் புறங்காட்டி ஓடுவதைக்காட்டிலும் அவமானமான காரியம் ஒன்றுமில்லை என்பதை எல்லோரு மறிவர். இது அக்காலத்துப் பெண்களுக்கும் தெரியாததன்று. உதாரணமாக, காக்கைபாடினியார் * என்பவர் அரிதான ஒருசரித்திரத்தைக் கூறியிருக்கிறார். தன் நரம்பெல்லாம் நாராய்த் தெரியும் படியாயும், மேற் சதையெல்லாம் சுருங்கிச் சருகு போன்றதாயும் உள்ள புடு கிழவி யொருத்தி, தன் சிறுவன் போரில் மாண்டான் என்ற செய்தியைப் பலர் கூறக் கேட்டு 'அவன் புறங்காட்டி ஓடி, முதுகில் அடிபட்டு, இறந்திருப்பானாயின் குழந்தையா யிருக்கும் போது அவன் பால் பருகிய என் ஸ்தனத்தைச் சிதைத்துவிடுவேன்' என்று சினந்து, சபதஞ் செய்து, போர்க்களத்தில் தனக்கு வாள் அகப்படுமோ இல்லையோ என்று சந்தேகித்துக் கூரியதோர் வாளைக் கைக்கொண்டு, அவன் விழுந்து இறந்த இடத்துக்குச் சென்று, அங்கிருக்கும் பிணங்கள் எல்லாவற்றையும் துளாவி, குறிப்பால் தன் மகன் பிணத்தை எடுத்து, அவனது உடல் வேறு, சிரம் வேறாயிருத்தல் கண்டு மனமகிழ்ந்து, "என் சிறுவன் புறங்காட்டி ஓடவில்லை," "எதிரியோடு நேர் நின்று பொருதே இறந்தனன்," என்று நினைத்து, அப்பிணக் குவியலின் மத்தியிலேயே ஆனந்தக் கூத்தாடினள் என்று சொல்லியிருக்கிறார்.

"நரம்பெழுந் துலரிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
தனமறுத் திடுவன் யானெனச் சினைஇ
கொண்ட வாளொடும் படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!"

இவ்வீரத்தாயின் மனவலிமை வியக்கத் தக்கதன்றோ! பிள்ளையிறந்தான் என்று கேட்டு சாதாரணமாய்த் தாய்கள் மூர்ச்சித்து விசனக் கடலில் மூழ்கியிருப்ப, இவள் குதூகலித்துக் கூத்தாடினளே! இவள் ஆண்மையன்றோ ஆண்மை!

இப்பொழுது இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களில் ஒவ்வொரு பெண்ணும் 'என் குடும்பத்திலிருந்து பதின்மர் போர்க்குச் சென்றிருக்கின்றனர்,' 'என் குடும்பத்தினின்று இருபது பேர் சேனையில் சேர்ந்திருக்கிறார்கள்', என்று சொல்லிச் சந்தோஷிப்பது போல, நமது பெண்களும் தம் குடும்பத்திலிருந்து எவ்வளவு பெயர் சண்

* காக்கை கரைந்ததைப் பற்றி இவர் பாடியிருப்பதால் இவருக்குக் 'காக்கை பாடினியார்' என்ற பெயர் வழங்கிற்று. முற்காலத்துப் பெயர்கள் பலவும் காரணப் பெயராயிருத்தல் காண்க.

இராவுத்தனைத் தள்ளினதும் அல்லாமல் குழியும் பறித்ததாம் குதிரை.

டைக்குச் செல்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு தமக்குக் கௌரவம் அதிகம் என்று நினைத்தார்கள். இதை 'ஒக்கூர் மாசாத்தியார்'* என்பவருடைய பாடல்களிலிருந்து நன்கு விளக்கலாம். 'ஒரு பெண்ணின் தந்தை முன்னாளில் நடந்த யுத்தத்தில் ஒரு யானையால் எதிர்க்கப்பட்டு இறந்தனன். நேற்று நடந்த போரில் அவள் கொழுநன் மாண்டான் அப்படியாயினும் மறுபடி இன்றைக்குப் போர் முரசம்கேட்டவுடனே போருக்குத் தன் குடும்பத்திலிருந்து எஞ்சிய பெயரையும் அனுப்ப வேண்டுமென்ற விருப்பத்தால் மயங்கி, விருத்தாப்பிய தசையில் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ள தன் ஒரே மகனை அருகில் அழைத்து, வேலாயுதத்தை அவன் கையில் கொடுத்து, அவனுக்கு வெள்ளை வஸ்திரத்தை யுடுத்தி, தலைமயிரை நன்றாய் எண்ணெய் தடவிச் சீவி, மனமாற ஆசீர்வதித்துப் போர்க்களத்துக்குச் செல்க என்று அனுப்பினாளே, இவள் துணிவே துணிவு! இவள் சிந்தை எவ்வளவு கடுமையானது! இவளே வீரக்குடியில் பிறந்த பெண்ணாவாள்!' என்று வியப்புறுகிறார்.

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப் பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇ
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒரு மகனல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

இன்னும் தன் மகனைப் போர்க்கு அனுப்ப வேண்டும் என்ற ஆசை, பெண்கள் மனதில் எப்போதும் குடிகொண்டிருந்தது என்பது பின் வரும் பாட்டால் நமக்குத் தெரிவரும்:—

"வந்தபடை நோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃகம் பிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு."

அதாவது படைக்கு ஆள்வேண்டும் என்பது தெரிந்தவுடனே, தன் மகனும் சேனையிற் சேரவேண்டுமென்ற ஆத்திரத்தால், தன் ஸ்தனத்தில் பால் குடித்துக்கொண்டிருக்கும் குழந்தையைக் கீழே தள்ளிவிட்டு, முன் சண்டையில் வளைந்துபோன வேலாயுதத்தை அடுப்பில் போட்டுக் காய்ச்சி, நிமிர்த்தி, தன் மூதாதையோர்கள் போரில்சண்டை செய்து இறந்ததற்காக நாட்டப்பட்ட வீரக்கற்களைத் தன் மகனுக்குக் காட்டி, அவனைப் போர்க்குச் செல்க என்று சொல்லியனுப்பினாள். எவ்விஷயத்தைக் காட்டிலும் குழந்தை பால்பருகுவதே முக்கியம் என்று கருதும் பெண்டிர், அதையும் கவனிக்காமல் போர்க்குத் தன் மகனை யனுப்புவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள் என்றும், நாட்டைக் காப்பதற்கு வீரர்களைப் பெண்டிரே தேர்ச்சி செய்துகொண்டு வந்தார்கள் என்றும் இதனால் நன்கு விளங்குகின்றனவல்லவா?

மற்றோரிடத்தில் ஒரு பெண் 'எங்கே உன் பிள்ளையைக் காணோம்?' என்று கேட்டதற்கு 'அவன் போருக்குப் போயிருப்பான்' என்று மறுமொழி கொடுத்ததுந் தவிர, தன் வயிற்றைப்பார்த்து, 'இது புலிகிடந்த குகையன்றோ' என்று சொல்லி மகிழ்ந்தாள். இதனால் அக்காலத்துத் தாய்கள் வீரமுள்ள பிள்ளைகளைப் பெறுதலே தம்மை மேன்மையுண்டாக்கும் என்று கருதியிருந்தார்கள் என்பது புலப்படவில்லையா?

நாட்டுக்காகப் போர் முனையிற் சாவதே உத்தமமான சாவென்றும் மற்றெல்லாம் இழிவானதே என்றும் அப்பெண்களின் கொள்கை. 'மணிமேகலை'யில் இதற்கு நல்லதோர் சான்றுள்ளது. ஒரு அரசன் புத்திரனாகிய உதயகுமாரன் என்பவன் துறவிப்பெண்ணாகிய மணிமேகலையோடு சேரவேண்டும் என்ற அவாவால், மதியிழந்து, அவளைப் பலாத்காரம் செய்யப் பிரயத்தனப்பட்ட போது, ஒரு கந்தருவனால் மாண்டான், என்ற செய்தி கேட்டு, அவன் தாய் விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கையில் தோழியாகிய வாசந்தவை யென்பாள் அருகே வந்து, சமாசாரத்தை யறிந்து, அவளைத் தேற்றுமாறு,

"தன் மண் காத்தன்று, பிறர்மண் கொண்டன்று
என்னெனப்படுமோ நின் மகன் மடிந்தது"

* ஒக்கூர் என்ற ஊரில் இவர் இருந்ததால் இவருக்கு இப்பெயர் வழங்கிற்று.

இருந்தவன் எழுந்திருக்கிறதற்குள்ளே நின்றவன் ஒரு காதம் போவான்.

என்று சொல்லுகிருள். அதாவது உன் மகன் தன் நாட்டைச் சத்துரு வசம் ஒப்பிக்காமல் சண்டைபோடுவதில் மாண்டானல்லன்; மற்ற நாட்டைக் கவரும்போதும் இறந்தானல்லன்; அவன் சாவும் ஒரு சாவா? ஈனமான காரியத்தைச் செய்ய ஆரம்பித்து இறந்தனனுதலின், நீ அவனைப்பற்றி துக்கப்படவேண்டாம்' என்ருள்.

இவைகளைத் தவிர நமது இதிஹாஸ புராணங்களிலும் வீரச்சுவை பொலிந்து விளங்கும் பாக்கள் பலவுள. ஆயினும் நாம் மேற்கோளாய்க் காட்டியுள்ள இவற்றிலிருந்தே நமது முன்னேர்களுக்குச் சண்டை செய்யும் திறன் நிரம்ப இருந்ததென்றும், அவர்களுக்குப் போர் முனையில் இறப்பது வெகு சந்தோஷகரமானதென்றும், வீரத்தன்மை ஆண்பாலார்க்கன்றிப்பெண்பாலார்க்கும்மிகுதியாயிருந்ததென்றும், அக்காலத்துப் பெண்கள் தமது ஆண்மக்களோடு சரிசமமான தைரியம் பொருந்தியவர்களென்றும், அவர்கள் சமய விஷயங்களிலும், இராஜீய விஷயங்களிலும், ஜன சமூக விஷயங்களிலும், மிக்க ஊக்கத்தை உடைத்தா யிருந்தார்கள் என்றும், கவித்திறமையிலும், கல்வித் திறனிலும் ஆண்பாலரை விடச் சற்றும் குறைந்தவரில்லை யென்றும், ஜனன தேசத்தின் அன்பு அவர் தம் மனதில் நின்று குடிகொண்டிருந்த தென்றும் நாம் அறிகிரேமல்லவா? இப்பேற்பட்ட வீரத் தாய்மாரின் வயிற்றுதித்த இக்காலத்துப் பெண்டிரும் அவர்தம் தாய்மை, வீரம், ஒழுக்கம் முதலிய குணங்களைப் பெற்று அவர்கள் எப்படித் தம் பிள்ளைகளை நாட்டின் பாதுகாப்புக்காகப் போர்முனைக்கு அனுப்பி, அழியாப் புகழடைந்தனரோ, அவ்வழியே இவர்களும் தம் மக்களை இந்தியகாப்புச் சேனையிற் சேரும்படிசெய்து (Indian Defence Force) நமது ஜனன பூமியின் முன்னேற்றத்துக்கு எவ்விதத்திலும் உழைப்பாராக!

---

# சென்னையின் வரலாறு

## THE STORY OF MADRAS


### கோட்டையும் அதன் கட்டடங்களும்

உள் கோட்டை நான்கு கொத்தளங்களோடு கூடிய 100 கஜ சதுரமுள்ளது. வெளிப் பக்கத்தில் தேன்கூடுபோல் அதிக சொற சொறப்பான இரும்பு வர்ணமுள்ள இரும்பு கற்களென்று சொல்லப்பட்ட கடினகற்களால் கட்டப்பட்டது. கவர்னர் அரண்மனை, கோட்டைக்கு மத்தியிலுள்ளது. இதில் கம்பெனி வேலைக்காரர்களுக்கும் அறைகளுண்டு. இது அழகான உயர்ந்த சதுரக்கல் கட்டடம். வெளிக் கோட்டை வெள்ளையர் பட்டணத்திற்கு மத்தியிலுள்ளது. இது நீர்க்க சதுரமானது. இதன் நீளம் கால் மைல். அகலம் இதில் பாதி கூட இல்லை. இப்போது அக்கவுண்டெண்டு ஆபீஸ் என்று வழங்கப்படும் கட்டடம் முன் அட்மிராலெட்டி ஹவுஸ் என்று வழங்கப்பட்டது. இதில் ராபர்ட் க்ளைவ் குடி இருந்தார். ஸெண்ட் மேரி மாதா கோவில் 1678-ஞு அஸ்திவாரம் போடப்பட்டு 1680 ஞு கட்டி முடிக்கப்பட்டது. கோட்டையிலுள்ள இங்கிலீஷ்காரர்களே தங்களுக்குள் வரிவசூலித்து இதைக் கட்டினார்கள். இது சென்னை இங்கிலீஷ் வீரசொர்க்க மென்று கருதப்படுகிறது. தென்னிந்தியாவின் சரித்திரத்தை யுண்டு பண்ணின மனிதர்களின் ஞாபகக்குறிகள் இதில் பாதுகாக்கப்பட் டிருக்கின்றன.

### கம்பெனி உத்தியோகஸ்தர்கள்

கம்பெனி உத்தியோகஸ்தர்கள்மொத்தத்தில் இருபத்து நான்கு பேர். முதலாவது உத்தியோகஸ்தர் ஆலோசனை சபைக்கு முதல் அங்கத்தினராகிய கவர்னர். இவருக்குச் சம்பளம் வருஷத்திற்கு 300 பவுன். இவருக்கு அடுத்தபடி கம்பெனி கணக்குப்பிள்ளை. இவர் இரண்டாவது அங்கத்தினர். இவர் சம்பளம் வருஷம் 100 பவுன். மூன்ருவது மெம்பர் பண்டக சாலைகாப்பவர். இவர் சம்பளம் வருஷத்திற்கு 70 பவுன். நான்காவது மெம்பர் சாமான் வாங்குபவர். இவர் சுதேசிகளிட மிருந்து சாமான்கள் வாங்குவதன்னியில் கம்பெனிக்குச் சேர வேண்டிய வாடகைகளையும் வரிகளையும் வசூலிப்பதுண்டு. ஒழிந்த வேளைகளில் இவர் ஒரு நியாயாதிபதி. இவ்வித வேலைகளுக்காக இவருக்

குப் பெரியசம்பளம் வருஷத்திற்கு 50பவுன். இது மாதிரி ஐந்தாறு அங்கத்தினர்களிருந்தார்கள். இவர்களுக்கு ஒருவருக்காவது வருஷச் சம்பளம் 100 பவுனுக்கதிகமில்லை. ஆனால் எல்லோரும் சொந்த வியாபாரம் செய்து அதிகப் பணம் சம்பாதிப்பது வழக்கம். இதைப்பற்றி இங்கிலாந்திலுள்ள கம்பெனியின் டைரெக்டர்கள் கண்டித்தும் கம்பெனி வேலைக்காரர்களின் சொந்த வியாபாரம் பலமடைந்ததேதவிர, கொஞ்சங்கூடக் குறையவில்லை. ஆலோசனைசபை அங்கத்தினர்கள் "வியாபாரிகளென்றும்", "பெரிய வியாபாரிகளென்றும்"



வழங்கப்பட்டனர். "பெரிய வியாபாரிகள்" என்ற பட்டம்பெறக் கம்பெனி வேலைக்காரர்களெல்லோரும் ஆசைப்படுவதுண்டு. இங்கிலாந்திலிருந்து சிறுவர்கள், சில சமயங்களில் "குமாஸ்தாக்களாகவும்" சில சமயங்களில் "வேலை கற்றுக் கொள்பவராகவும்" வருவதுண்டு. "வேலைகற்றுக் கொள்பவர்கள்" மேல் அந்தஸ்திற்கு மாற்றப்படுமுன் ஏழுவருஷம் வேலை செய்யவேண்டும். முதல் ஐந்து வருஷங்களில் உடுப்புக்காக வருஷத்திற்கு இவர்களுக்குச் சம்பளம் ஐந்து பவுன். அடுத்த இரண்டு வருஷங்களில் இவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 10 பவுன் சம்பளம். இதற்குப் பிறகு இவர்கள் "குமாஸ்தாக்கள்" என்று வழங்கப்பட்டு, ஒரு வருஷம் சென்றதும் "காரியஸ்தன்" என்று கூப்பிடப்பட்டு, பிறகு "வியாபாரிகளும்" சபையின் அங்கத்தினராகவுமாவது வழக்கம். மேற் சொல்லியவர்களைத் தவிர, வேறு இரண்டு உத்தியோகஸ்தர்களுண்டு. இவர்களில் ஒருவர் மாதாகோவில் குருக்கள். இவருக்குச் சம்பளம் வருஷத்திற்கு 100 பவுன். மற்றவர் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர், இவர் சம்பளம் வருஷத்திற்கு 50 பவுன். இவர் எல்லாக் குழந்தைகளுக்கும் மதபேதம் பாராட்டாமல் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் கற்றுக்கொடுப்பவர்.

### பழைய கோட்டையில் ஒருநாள்

அதிகாலையில் குண்டு சப்தம் கேட்கும், எல்லோரும் படுக்கைவிட்டு எழுந்திருப்பார்கள். ஐரோப்பியச் சிப்பாயின் அளந்து நடக்கிற நடையும், இடுப்பில் தோல் பெல்ட்டும் கத்தியும் தரித்த சிறிய கம்பீரமான சேவகனும், வஸ்திரம் தரியாமல் கூலிகள் ஹோவென்று சப்தம் செய்துகொண்டு ஓடி வருகிறதும், வேலை கற்றுக் கொள்பவர்களும், குமாஸ்தாக்

களும், காரியஸ்தர்களும், வியாபாரிகளும் இந்துக்கள்போல் பாதி உடை தரித்துக் கொள்வதும், காலைப்பிரார்த்தனைக்காக மாதா கோவிலில் கூடும் கூட்டமும், பண்டகசாலைகள் திறக்கப்பட்டு வியாபாரிகள் சப்தம் போட்டுக் கொண்டு வருவதும், விற்பனைக்காக ஐரோப்பிய சாமான்கள் பரப்பியிருப்பதும், ஏற்றுமதிக்காகச் சாமான்கள் மூட்டைகளாகக் கட்டப்படுவதும், சிறிய பள்ளிக்கூடமும், அதிலுள்ள நானாவித வர்ணமுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் வேலை கற்றுக்கொள்பவர்கள் முதல், கவர்னர்வரையில் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து சாப்பிடும் மத்தியானச் சாப்பாடும், மறுபடியும் இவர்கள் வேலைக்குப் போவதும், வேலைவிட்டு சாயந்திரம் வீட்டுக்குத் திரும்புவதும் வெகு விநோதமா யிருக்கும். ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை இல்லை. அப்போது எல்லோரும் ஐரோப்பிய உடை தரித்து மாதாகோவிலுக்குப் போவது வழக்கம். மாதாகோவிலில் குருக்கள் ஒரு மணிநேரம் கவர்னரைவிடப் பெரிய மனிதனை விருப்பார்.

கோட்டைக்கு வெளியில் தோட்டங்களுண்டு. இவைகளில் கம்பெனி குமாஸ்தாக்களும், காரியஸ்தர்களும் போய் உலாவுவதுண்டு. சில சமயங்களில் குடித்துவிட்டு அக்காலத்தில் பாடப்படும் வேடிக்கைப்பாட்டுகள் பாடுவார்கள். கோட்டை விட்டு மூன்று மைலுக்கப்பால், கவர்னர் உத்திரவன்னியில் ஒருவரும் போகக்கூடாது. கம்பெனி வேலைக்காரர்களுக்குள் குடி, சண்டை, சூதாட்டம் அதிகம். ஆகிலும் ராஜபக்தியும், மதாபிமானமும் இவர்களிடமுண்டு. இவர்களுடைய கெட்ட குணங்களை அடக்கக் கவர்னர்கள் அநேக சட்டங்கள் செய்தும் பிரயோசனப்படவில்லை. குடிகாரர்கள் தண்டிக்கப்படுவதுண்டு. மிதமிஞ்சிக் குடிப்பர்களைக் காவலில் வைத்து பிறகு, இங்கிலாந்திற்கு அனுப்பிவிடுவார்கள். பொய் சொல்லுகிறவர்களுக்கும் காலை மாலைபிரார்த்தனைக்காகக்கோவிலுக்குப்போகாதவர்களுக்கும் நான்கணா அபராதம். இரவு 8 மணிக்குமேல் கோட்டையைவிட்டு வெளியில் போகிறவர்கள் தண்டிக்கப்படுவதுண்டு. எக்காரணத்தைக் கொண்டாவது கோட்டைச் சுவர் ஏறிக்குதிப்பவர்கள் விலங்கு போடப்பட்டுக் கப்பல்கள் வந்தவுடன், இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு, கடுந்தண்டனை விதிக்கப்பட்டார்கள். சண்டைபோடுகிறவர்களுக்கு இரண்டுமாசம் காவல், கம்பெனி சிப்பாய்களுக்குத் தண்டனை கடுமை. குற்றஞ்செய்வதவர்களைக் கட்டிவைத்துச் சவுக்கால் அடிப்பதுண்டு. இவ்வளவு தண்டனைகள் ஏற்பட்டிருந்தும் கம்பெனி வேலைக்காரர்களுக்குள் எப்போதும் சண்டை சச்சரவுகள் அதிகம். லார்ட் பிகெட் என்று ஒரு கவர்னர் இருந்தார். அவருடைய ஆலோசனை சபை அங்கத்தினர்கள் எல்லோரும் கர்னல் ஸ்டேவர்ட்டைத் தஞ்சாவூருக்குத் தளகர்த்தனாக அனுப்பும்படி சொன்னார்கள். பிகெட் மாட்டேனென்று சொல்லிவிட்டார். கவர்னர் தகவலன்னியில் அங்கத்தினர்களெல்லோரும் ஸ்டேவர்ட்டைத் தளகர்த்தனாக நியமித்து விட்டார்கள். இதைக் கேட்டதும் பிகெட் கோபித்து அங்கத்தினர்களை ராஜதுரோகிகளென்று குற்றஞ் சாட்டினார். இவர்கள் பிகெட்டை எப்படியாவது ஸ்டேவர்ட்டால் கைதியாக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஒருநாள் இராத்திரி 8½ மணிக்குக் கர்னல் ஸ்டேவர்ட்டைப் பிகெட் தன்னுடைய வீட்டுக்கு இராச்சாப்பாட்டிற்காக அழைத்துக்கொண்டு போகும் போது, தீவில் மன்ரோ பிம்பத்திற்குச் சமீபத்தில் ஸ்டேவர்ட்டு லார்ட் பிகெட்டைக் கைதியாகப் பிடித்து, பரங்கிமலைக்குக் கொண்டுபோய் மேஜர் ஹார்ன் வீட்டில் சிறைவைத்தனர். அச்சிறையிலேயே 1777-ம் ௵ மேமீ 11வ பிகெட் இறந்தார். பிகெட் யாதொரு கல்வெட்டுமில்லாமல் ஸெண்ட் மேரி மாதாகோவிலில் புதைக்கப்பட்டார்.

### மத்ராஸ் பாங்கி

இது 1683 வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. முதலில் லட்சம் பவுன்வரையில் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு 6வீதம் கடன் வாங்குவதாகவும், பணம்போடுகிறவர்கள் எந்தத்தொகையும் ஆறு மாசத்திற்குக் குறையாமல் போட வேண்டுமென்றும், அப்படிப் போட்டபணத்திற்கு ௵-க்கு நூற்றுக்கு 6வட்டியென்றும், இவ்விதம் பணம் போடுகிறவர்களுக்குக் கம்பெனி முத்திரையுடன் ரசீது கொடுக்கப்படுமென்றும் தம்பட்டம் அடிக்கச்செய்து ஜனங்களுக்குக் கவர்னரும் அவர் ஆலோசனைசபை அங்கத்தினர்களும் பகிரங்கப்படுத்தினார்கள்.

### நியாய ஸ்தலம்

முதலில் மாதாகோவில் நியாய ஸ்தலமாகவுமிருந்தது. நியாயதிபதி கவர்னரே. பன்னிரண்டு ஜூரிகளின் அபிப்பிராயத்தைக் கலந்து கவர்னர் நியாய பரிபாலனஞ் செய்வதுண்டு. இப்படிச்செய்தும் கவர்னர் நியாயபரிபாலனம் சரிவரச் செய்யவில்லை என்று அனேக புகார்கள் ஏற்பட்டதால், இங்கிலாந்திலுள்ள கம்பெனி டைரெக்டர்கள் இங்கிலிஷ் அரசர் உத்திரவின் பேரில் தாங்கள் அவ்விடமிருந்து ஒரு நியாயாதிபதி அனுப்புவதாகக் கடிதம் எழுதி, அவ்விதமே ஒருநியாயாதிபதியை அனுப்பினார்கள். இவர் சென்னை வந்து சேர்ந்ததும், "அட்மிரால்டி கோர்ட்டு" என்று சொல்லப்பட்ட புது நியாயஸ்தலம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

### மதராஸ் கார்போரேஷன்

தற்கால மதராஸ் கார்போரேஷன் ஆபீஸ் பெரியமெட்டிலிருக்கும் "ரிப்பன் பில்டிங்ஸ்" என்று சொல்லப்பட்ட பெரிய கட்டடம், 1913 வருஷத்தில் கட்டிமுடிக்கப்பட்டு, அப்போது ராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ஹார்டிஞ்சு பிரபுவால் திறக்கப்பட்டது. மதராஸ்கார்போரேஷன், முதல் முதல் 1688 வருஷத்தில் மிஸ்டர் ஜோஸய்யா சைல்டு என்பவரின் ஏற்பாட்டின்படி, மிஸ்டர் யிஹுகு ஏல்என்பவர்மதராஸ் கவர்னராகவிருக்கும் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது "கார்பொரேஷன் பிரஸிடெண்டு" என்று சொல்லப்பட்ட உத்தியோகஸ்தர் அக்காலத்தில் "மேயர்" என்று அழைக்கப்பட்டனர், கார்பொரேஷன் கமிஷனர்களுக்கு "ஆல்டர்மென்" "நகரத்தார்" என்று பெயர். பலஜாதிகளின் நாட்டாமைக்காரர்கள் ஆல்டர்மென்னாகவும் நகரத்தாராகவும் நேமிக்கப்பட்டார்கள். இவர்கள் தங்களுக்குள் ஒருவரை மேயராகப் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம். மேயரைத் தவிர, ஆல்டர்மென் பன்னிரண்டு பேர். இவர்கள் மெல்லிய சிகப்புப்பட்டாடை தரிக்கவேண்டும். நகரத்தார் வெண்மையான சீனா பட்டாடை தரிக்கவேண்டும். இவர்கள் 60 முதல் 100 பேர்வரையிலிருந்தார்கள். இவர்களுடைய வேலைக்காரர்கள் இவர்களுக்கு முன்னால் வெள்ளித்தடிகள்பிடித்துப் போவதுண்டு. கார்பொரேஷன் உத்தியோகஸ்தர்கள் கவர்னரவர்கள் சம்மதத்தின்பேரில் மேயராலும் ஆல்டர்மென்னாலும் நியமிக்கப்படவேண்டும். மேயரும் ஆல்டர்மென்னும் நியாயாதிபதிகளாகவிருந்து அவர்களுக்கு முன் கொண்டுவரப்படும் வியாச்சியங்களை விசாரித்துத் தீர்ப்பு செய்வதுண்டு. 12 ஷில்லிங்குக்கு மேல் அபராதம் விதிக்கப்பட்டவர் "அட்மிரால்டி கோர்ட்டிற்கு" அப்பீல் செய்யலாம். எல்லாச் சிவில் வியாச்சியங்களிலும், கவர்னருக்கும் அவர் ஆலோசனை சபையாருக்கும் அப்பீல் செய்து கொள்ளலாம். அபராதம் விதிக்கப்பட்ட தொகையில், பாதி கம்பெனியாருக்கும், பாதி கார்பொரேஷனுக்கும் பாத்தியம். இங்கிலிஷ்காரர்கள் குற்றஞ் செய்தால் அவர்களை விசாரிக்க இவர்களுக்கு அதிகாரமில்லை. மூன்று வராகனுக்குள்பட்ட சிவில் கேசுகளில் இங்கிலிஷ்காரர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அப்போது அவர்களை மேயரும் ஆல்டர்மென்னும் விசாரிக்கலாம். மேயர் ஆல்டர்மென் பதின்மூன்று பேரில், மூன்று பேர் கம்பெனி வேலைக்காரர்களாகிய இங்கிலிஷ்காரர்கள்; மூன்றுபேர் போர்ச்சுகேசியர்; பாக்கி ஏழுபேர் மகமதியர்களும் இந்துக்களும். கட்டடங்கள் கட்டவும், இனம் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தவும், கவர்னர் சம்மதத்தின் பேரில் ஜனங்களிடத்தில் வரி வசூலிக்கவும் கார்பொரேஷனுக்குஅதிகாரமுண்டு. மேயர் ஆல்டர்மென் நகரத்தார்கள் தங்கள் தங்கள் வேலையை ஒப்புக்கொள்வதற்கு முன் இங்கிலிஷ் ராஜாவுக்கும், கம்பெனிக்கும், தற்கால கவர்னருக்கும் தாங்கள் உண்மையாகவும் நம்பிக்கை யுள்ளவர்களாகவு மிருப்போமென்று பிரமாணஞ் செய்யவேண்டியது.


## பஞ்சரத்தினம்

(5 அழகிய ஆப்டோன் படங்களுடன்.)

ஸீதை, சகுந்தலை, உருக்குமணி, தமயந்தி, சாவித்திரி இவ்வுத்தமிகளின் சரிதங்கள் இனிய நடையில் எழுதப் பெற்றது. கனம் ஹைகோர்ட் ஜட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ, திவான் பஹதூர் ஸி. வி. குமாரஸ்வாமி சாஸ்திரியாரவர்கள் முன்னுரையுடன் கூடியது. இரண்டாம் பதிப்பு. விலை அணா 12. சந்தாதாரர்க்கு மாத்திரமே அணா 10.

# கல்விக் குறிப்புகள்

## EDUCATIONAL NOTES

*பம்பாயில் கல்விவிஷயமான தர்ம ஸ்தாபனம்*

பம்பாய் மாகாணத்தில் வித்யா விஷயமாக கனம் ஸர் விடல்தாஸ் தாமோதர தாகர்ஸே அவர்கள் ஏற்படுத்தியதர்ம ஸ்தாபனத்தை அபிமானிகள் அறிவர். ஏழைப் பிள்ளைகள் மேற்கல்வி கற்கச் சவுகரியம் செய்யவேண்டி அவர் இப்போது ரூ. 5 லக்ஷம் மதிப்புள்ளவோர் தர்ம ஸ்தாபனம் செய்திருக்கின்றனர். பம்பாய் சர்வ கலாசாலையில் படிக்கும் ஏழைகளுக்குமட்டுமே இவ்வுதவி ஏற்பட்டதாகும். இதிலிருந்து அப்படிப்பட்ட ஏழைப்பிள்ளைகளுக்குக் கடன் கொடுக்கப்படும். பரீக்ஷை தேறி உத்யோகத்திலமர்ந்தபின், அவர்கள் இக்கடனைச் சவுகரியப்படி தவணையாகத் திருப்ப வேண்டியதென்பது ஒரு நிபந்தனை. இதனால் இம்மூலதனம் குறையாது, வருஷந்தோறும் வரும் ஏழைப்பிள்ளைகளின் உதவிக்குச் சித்தமாக இருக்கவேண்டுமென்பதே கனம் ஸ்ரீமானவர்களின் நோக்கம். பணச் சவுகரியமில்லாது நம்முள் அநேகர் அரைப்படிப்போடு காலக்ஷேபம் செய்ய வேண்டி வரும் பெரும் ஸங்கடத்தை நாம் தனித்துச் சொல்லவேண்டியதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு மேற்கூறிய பணவுதவி பெரும்பயனைத் தருமென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீமான் தாகர்ஸே செய்திருப்பதைப்போல இன்னும் பலவிடங்களில் அநேகர் செய்ய முன் வருவார்களென்று எதிர் பார்க்கிறோம். இச் சந்தர்ப்பத்தில் கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜில் இப்படிப்பட்ட "ஏழைப் பிள்ளைகளின் மூலதனம்" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததை அபிமானிகளுக்குத் தெரிவிக்கிறோம். அது, அங்கு தலைமை வகித்த ஸ்ரீமான் நாகோஜி ராயரவர்களால் ஏற்பட்டது. அதினின்றும் கடன்வாங்கிச் சம்பளம் கொடுத்து, பரீக்ஷையில் தேறி, முன்னுக்கு வந்தவர்களில் சிலரை நாம் அறிவோம். அம் மூலதனம் இப்போது, "கும்பகோணம் காலேஜ் பழைய பிள்ளைகளின் சங்கத்தார் வசம் இருந்து வருவதாயும், அதினின்றும் ஏழைப்பிள்ளைகளுக்கு வித்யா விர்த்திகள் கொடுக்கப்படுவதாயும் தெரியவருகிறது. வித்யாவிர்த்தி கொடுப்பதிலும் மேற்கூறியபடி கடன் கொடுத்து உதவுதல் நன்மை பயக்குமன்றோ?

* * *

*இந்தியா கவர்ன்மெண்டும் பிரதமக் கல்வியும்.*

சென்ற வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார், மாகாணக்கவர்ன்மெண்டார் அனைவருக்கும் வித்யா விஷயமாக ஒரு ஓட்டு உத்தரவை அனுப்பியிருந்தனர். அதன்படி, அடுத்த பத்து வருஷங்களுக்குள், பிரதமக் கல்வியைக் கற்கும் மாணாக்கர்களின் ஸங்கியை இப்போதைவிட இருமடங்கதிகரிக்க வேண்டுமென்பதும், அதற்கேற்படும் செலவை, தாமும், பிரதேச கவர்ன்மெண்டாரும் லோகல் போர்டாரும் சமமாகக் கொள்ளவேண்டுமென்பதும், நோக்கமெனக் காட்டினர். ஆனால், தம் இந்திய ராஜாங்கரீதி சீர்திருத்தங்கள் காரணமாக ஷை வித்யா விஷய புரோவிருத்தியைக் கவனிக்க இடமில்லாம லிருந்தது. இச்சீர்திருத்தங்கள் அமுலுக்கு வரும்போது, பிரதேச கவர்ன்மெண்டாருக்குப் பணச்செலவு விஷயத்தில் சில அம்சங்களில் சுயேச்சை ஏற்படுதலால் வித்யா விஷயமாக அவர்களே சகல காரியங்களையும் செய்யவேண்டிவரும். ஷை இரண்டு விஷயங்களையும் இந்தியாகவர்ன்மெண்டார்சுட்டிக் காட்டிப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பி, பிரதம கல்வி விஷயமாகப் பிரதேச கவர்ன்மெண்டார் சிரத்தை பாராட்டி அச்சிரத்தை மூலமாக அவ்வப் பிரதேசங்களில் கல்வி யபிவிருத்தி வரவர முதிரவேண்டுமென்று தாங்கள் கொண்டிருக்கும் கோரிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். வித்யாவிஷயமாகப் பிரதேச கவர்ன்மெண்டாரது கடமையைக் குறிப்பிட்டுக் காட்டிய இவ்வுத்தரவு கல்வியபிவிருத்தியில் அபிமானம் கொண்டிருப்பவர் அனைவருக்கும் சந்தோஷத்தையே தரும்.

* * *

இயற்கை அற்புதங்கள்
(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)
காலஞ்சென்ற ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ராவ் பஹதூர் மிஸ்டர் எல். வி. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் முகவுரையுடன் கூடியது. சித்திரப் படங்கள் கொண்டது. விலை அணு 8.

இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுப்பான்.

# வஸந்த மந்திரம்

(121-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஏழாம் அதிகாரம்

### ஜோதிபுரியிலிருந்து கல்யாண சமாசாரம்

உதயபுரியில் பிரதாபசிங்கர் அரண்மனை; பூந்தோட்டத்திலே நடுமத்தியில் கட்டியிருக்கும் சிறிய மண்டபம். நாற்புறமும் மண்டபத்து ஜன்னல்கள் திறந்துவிட்டிருக்கின்றன. அப்படியும் காற்றே கிடையாது. பொழுது விடிந்து 7, 8, நாழிகை இருக்கலாம்; என்றலும் வெயிலின் [illegible]சொல்லி முடியாது. மண்டபத்தின் நடுவில் உயர்ந்த ஆஸனங்களில் உட்கார்ந்துகொண்டு சம்பாஷிக்கும் அரசனுக்கும் மந்திரிக்கும் இருவர் பலமாக விசிறுகின்றனர். சுற்றிலும் இன்னும் பல நாற்காலிகள் இருக்கின்றன.

அரசன்.—"அதெல்லாம் இருக்கட்டும்; இன்று புதன்கிழமை யல்லவா? இன்னும் ஏன் ஜோதிபுரியிலிருந்து ஒருவரும் வரவில்லை! ஒருவேளை ஜயபாலன் நம்முடன் சம்பந்தம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லையோ! அவனது மந்திரி ஏதாவது தடை சொன்னனே! அவ்வூராருடைய அபிப்பிராயம் வித்தியாசமாகவிருக்கலாமோ! எனக்கு இக்கல்யாண விஷயம் ஒன்றுதான் மனத்தைச் சதா வருத்துகின்றது: பழையநாட்களே நாட்கள்; எனது முன்னோர், என் அருமை லலிதைபோன்ற பெண் இருந்தால் அவளுடைய விவாகத்திற்கு இவ்வளவு கஷ்டப்படுவார்களா? சுவயம்வரம் ஏற்படுத்தும்போது அரசர்கள் 'நான், நீ' என்று மேல்விழுந்து வருவார்களே—"

மந்திரி (சுமதி).—"என்செய்யலாம் அரசே! காலம் மாறிவிட்டது. அக்காலத்திலும் சில தொந்தரவுகள் இருந்தே இருந்தன. ஒரே விதமான பழைய வழக்கங்கள் நீண்டகாலம் நடைபெறமாட்டா. கடவுளின் ஆணைப்படி பழையன கழிதலும், காலத்துக்கேற்பப் புதியவழக்கங்கள் புகுதலும் நேரானதே. தாம் கவலைப்படக் கூடாது. ஜயபாலர் நம்மை ஏமாற்றமாட்டார். ஜனங்களுடைய சம்மதமும், மந்திரிகளின் உடன்பாடும், கிடைக்குமென்ற தைரியம் இல்லாவிட்டால் அவ்வளவு நிச்சயமாய் என்னிடம் வாக்களித்திருக்கவே மாட்டார். அவர் பேசிய வார்த்தைகளிலிருந்தும், முகக் குறிப்புகளிலிருந்தும் எனக்கு ஒருவித நம்பிக்கை உண்டாயிற்று. நான் புறப்பட்டு வந்து 16 நாட்கள் தானே ஆயின. இன்னும் கெடுவு இருக்கின்றதே சமாசாரம் வருவதற்கு—"

அரசன்.—"சுமதியாரே! நீர் சொல்வது சரியே; நீர் இவ்விடம் வந்து 15,16 நாட்கள் ஆய்விட்டதல்லவா? ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு வருஷமாகத் தோன்றுகின்றது எனக்கு! ஒவ்வொரு நாளும் எத்தனை தடவை நான் நாட்களை எண்ணி எண்ணி ஏக்கப்படுவேன்! என் பெண்மணி லலிதாம்பிகையின் மேனி தினேதினே விருத்தியடைய என் [illegible]ஊனம் அதே அளவில் உற்சாகம் குறைகின்றது! [illegible] இது என்ன சோதனை!—" [illegible] சிக்கின்றான் அரசன்; மந்திரியும் [illegible]

தூரத்தில் இராணி [illegible] காந்திமதி வ[illegible] வரு[illegible] அவளைக்கண்ணுற்றதும் இரு[illegible] ரில் விசனிக்கக்கூடாதென்று [illegible] வெளிக்காட்டாமல் சிரமத்துடன் [illegible] மலரவைத்துக்கொண்டு, அவள் உள்[illegible] யும் வரையில் ஒன்றும் பேசவில்லை. அம்மையும் வந்தாள். மந்திரி "வந்தனம்! அம்மா!" என்று சொல்லித் தன்னிடத்தில் உட்கார்ந்தான். "என் அன்பே! என்னிடம் உட்காருவாய்" என்று ஓர் நாற்காலியைக் காட்டினான் அரசன். இராணி உட்கார்ந்தவுடன், "ஏது இன்று காலையில் இப்பொழுதிலேயே நமது சுமதியார் அரண்மனைக்கு வந்துவிட்டது?" என்று புன்சிரிப்புடன் கேட்டாள். மந்திரி ஒன்றும் பதில் சொல்லவில்லை. கல்யாண விஷயமாய் ஏதாவது சமாசாரம் வந்திருக்கலாம், இல்லையேல் வரக்கூடும், என்று சந்தேகித்து, மந்திரி இன்று காலையில் அரண்மனைக்கு வந்தது. அதைச் சொல்ல இஷ்டப்படாதவனாய் அரசியின் முகத்தை உற்றுப்பார்த்தான். தான் ஜோதிபுரியிலிருந்து திரும்பி வந்தபொழுது, இதற்கு முன்தடவை இராணியைப்பார்த்தது. இன்னும்ஒருவாரம்கூட முழுவதும் கழியவில்லை. அதற்குள்ளேயே அவளது அழகியவதனத்தில் எவ்வளவோமாறுபாடுகள் நன்றாய்விளங்கின. கண்களைச் சுற்றிலும் சற்றே குழிந்துபோய் இருக்கின்றது; கன்னத்தின் எலும்புகள் கொஞ்சம் வெளிக்கிளம்பி நிற்கின்றன. புருவங்களிடையில் மடிப்புகள் தோன்

தினை; புன்சிரிப்புச் சிரித்தபோதிலும் அச்சிரிப்பினுள்ளே ஆற்றாக் கவலையால் ஏற்பட்ட மன வாட்டம் நிலைபெற்று விளங்கிற்று. இவையெல்லாம் சுமதி ஒரு நொடியில் கண்டுகொண்டான். அந்தப்புரத்திலிருந்து தோட்டத்திற்கு வந்த நடையே அவளுக்கு அதிகச் சிரமமாக விருந்தது. களைப்பால் உண்டான பெருமூச்சு இன்னமும் அடங்கவில்லை.

இவ்வாறு தோன்றும் இராணியை உற்றுப் பார்த்துவிட்டு, உடனே தலைகுனிந்து ஒன்றும் பேசாமலிருக்கும் மந்திரியைப் பார்த்து இராணி மறுபடியும் "வெயில் சற்று உக்ரமாய்த்தான் அடிக்கின்றது, இவ்வருஷம்! மேஷமாதத்திலேயே எவ்வளவு உக்ரம்! ...க்கா சூரியன் விருஷபத்தில் வந்து ...ஆகிறது? இன்னும் 10 நாழிகை ...ல்லையே? அதற்குள் இந்தப் பாடா?" ... பேசுவதற்கு ஏதாவது விஷயம் ...லவா? அதற்காக வெயிலும், உக்ர...மும் கிடைத்தன! அவ்வளவுதான். ...காரியமாய்ப் பேசினது ஒன்றுமில்லை "இவ்வுக்ரத்துக்குத் தக்கபடி மஹாபலமாய் மழை மிதுன மாதத்தில் பெய்யுமென்று சொல்லுகிறார்கள் பெரியோர்; கோடைமழையைக்கூடக் காணோம் இதுவரையில்; போன வருஷம்போல் வருணபகவான் ஏமாற்றாமல் இவ்வருஷம் வேண்டுமளவு மழை கிருபை செய்தாரானால் க்ஷேமம்தான்" என்றான் மந்திரியும்.

"இதோ ஜன்னல் வழியாய்ப் பாரும் இக்கொடிகளை! வெயிலில் வாடிப்போய்த் தலை தொங்குவதைப் பார்த்தால் மிலேச்ச சேனை செய்யும் தீங்குக்கு ஆளாகி, மனமழிந்து, நிலை தடுமாறி நிற்கும் இராஜபுத்திரிகள் போல் இருக்கின்றன" என்றாள் இராணி.

அரசன் "என்னருமை மனைவி! நீ என்னென்னவோ உவமையெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டாயே——"என்பதற்குள், ஒரு சேவகன் தூரத்தில் ஓடிவர அவனை மூவரும் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

விசிறிகளின் சப்தம் நன்றாய்க் கேட்கின்றதே தவிர வேறு சப்தமே கிடையாது. அம்மண்டபத்தில் மூச்சுக்கூட,பலமாய்விடவில்லை இராஜா இராணி மந்திரிமூவரும்! வந்த சேவகன் ஒரே அடியாய்க் கீழே விழுந்து, தண்டனிட்டு, எழுந்து, தலைகுனிந்து "ஜோதிபுரியிலிருந்து ஒரு பிராமண உத்தமரும் சில சேவகர்களும் வந்திருக்கின்றனர். உள்ளே வர உத்தரவாகவேண்டுமாம்" என்றான்.

அரசன்.—"என்ன! என்னப்பா சொன்னாய்! பலமாய்ச் சொல்லேன்! என்னடா மொணமொணவென்று! உனக்குக்கூடக் கேளாதே உன் வார்த்தை! ஜோதிபுரியா? பிராமணோத்தமர் வந்திருக்கின்றாரா? ...ன்னடா அப்பா சொல்லு?"

சேவகன்.—"ஆம்!சுவாமி!உத்தரவாகவேண்டுமாம் உள்ளே ..."

அரசன் "கூட்டிக்கொண்டுவா; போய் இவ்விடத்திற்கு! ஓடு! போ!" என்று அவனை அனுப்பி,"மந்திரி! என்னவாய் இருக்கும்இந்தப் பிராமணர் வந்த காரியம்?" என்று கேட்டான்.

இராணி "என்ன! கேட்பானேன்! கல்யாணம் தான்; பின்னையென்ன?" என்றாள். மந்திரி "இருக்கலாம்; பார்ப்போம். இதோ வந்துவிட்டார். அழைத்துக்கொண்டு வருகிறேன் அவரை" என்று எதிர் சென்றான்.

மந்திரி எதிர்கொண்டு அழைத்து வந்த பிராமணர் அரசனை வணங்கி, அவர் உத்தரவின் மேல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, மறுபடி எழுந்து, வெகு ஜாக்கிரதையாய்த் தமது மேல் வேஷ்டியில் சுற்றிவைத்துக்கொண்டிருந்த ஒரு கடிதத்தை அரசனிடம் நீட்டினார்.

மறுபடி எல்லோரும் மௌனம். கடிதத்தைவாங்கி,முத்திரையை உடைத்து, உள்ளே பார்ப்பது இமைப்பொழுதில் ஆய் விட்டது. படிக்கின்றான் கடிதத்தை அரசன். எல்லோரும் அரசன் முகத்தைப்பார்த்த வண்ணமாய் இருக்கின்றனர். படித்து முடிந்தது. அரசன் 'சுமதி! உமக்கு சுமதியென்ற பெயர் தகும். நீர் சொன்னபடியேதான் ...ன் மருமகன் ஜயபாலனும் எழுதியிருக்கிறான். மந்திரிகளும் பெரியோர்களும் கல்யாணம் நடப்பதற்குத் தடையில்லை என்கிறார்களாம்" என்றான். அரசன் வாய்மூடுவதற்குள் 'பளா, பளா' வென்று கௌளி சொல்லிற்று. எல்லோரும் அத்திசையில் திரும்பிப் பார்த்தனர்

அரசன் அதைக் கவனியாதவன் போன்று "என்ன ஐயா? ஜோதிபுரியில் எல்லோரும் சௌக்கியமா? என் மருமகன் ஜயபாலன் அரசாக்ஷி சரியாய் நடந்து வருகிறதா? மழைமாரி

எப்படி இருக்கின்றது?ஜனங்கள் எல்லோரும் திருப்தியாய் இருக்கிறார்களா?" என்று இவ்வாறு பல கேள்விகளைக் கேட்க, பிராமணர் "சமூகத்து ஆசீர்வாதத்தினால் எல்லாம் சரிவர நடந்து வருகின்றனவென்று சொல்லும்படி கேட்டுக்கொண்டார்" என்றார்.

அரசன்.—"அப்படியா! சந்தோஷம்—(தன் மனத்துள்) என்ன வணக்கம், என்ன பெருமை, என்ன புத்தி! (வெளிப்படையாய்) எனக்கு ஒன்றுவிட்ட தமக்கையும் உம் அரசருக்குத் தாயுமான அகிலாண்ட நாயகியார் சுகமோ?"

பிராமணர்.—"ஆம்! சுகமே! அவர்கள் சமூகத்துக்கு ஆசீர்வாத மனுப்பினார்கள்."

அரசன் "சந்தோஷம்! மிகவும் சந்தோஷம்! இவ்வளவு இன்பமான சமாசாரம் நீர் கொண்டுவந்ததுபற்றி எங்கள் எல்லோருக்கும் மிகவும் திருப்தி; ஜகதீசனுடைய திருவருளை முன்னிட்டு இக்காரியம் நிர்விக்னமாய்க் கைகூடவேண்டும்; அவ்வளவே யான் வேண்டுவது!" என்று தன் கையைக் கூப்பிக் கொண்டு, தன் முன் சுவற்றில் மாட்டியிருக்கும் விசுவேசுவரனுடைய படத்தைப் பார்க்கின்றான்.

மந்திரி.—"அரசே! அதற்கென்ன ஆக்ஷேபணை? இனிக் காரியம் கைகூடினது போலவேதான். நமது அரண்மனை ஜோஸ்யரைக் கொண்டு ஒரு முகூர்த்தம் பார்த்துத் தெரியப் படுத்திவிட்டால் சரி. முகூர்த்தவிஷயமய் ஏதாவது சௌகரியங்கள் சொல்லியிருக்கின்றனவோ கடிதத்தில்—சரி எல்லாம் பிறகு யோசிப்போம்."

அரசன்.—"ஆம்! ஆம்! பிறகு யோசிப்போம்! ஐயா உமது பேர்—"

பிராமணர்.—"இராமேசன்."

அரசன் "ஐயா இராமேசரே! நீர் நிரம்ப தூரம் நடந்து வந்து களைத்துப்போயிருக்கிறீர். நாழிகை 10க்குமேல் ஆகின்றது. ஸ்நாநம், போஜனம், இவை முடித்துத் தமக்கென்று விட்டிருக்கும் அறையில் சுற்றுச் சிரமபரிகாரம் செய்துகொள்ளுங்கள். இரவில் மறுபடி கூடிப் பேசுவோம்.—சுமதி! நீரும் இவருடன் கூடச்சென்று, இவருக்கும் கூடவந்தவர்க்கும் தக்க இடம் அமைத்துக் கொடும்" என்று சொல்ல, சுமதி இராமேசரைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். அரசனும் அரசியும் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டனர்.

## எட்டாம் அதிகாரம்.—வைதிகர் குதூகலம்

"ஏன் ஐயா! ஆதித்யநாதரே! போதாகவில்லையா? நதிக்குப் போகலாம் வாருமே!"

"போகலாம், ஆக்ஷேபணையில்லை; இந்நேரத்து வெயில் என்ன பொறுக்கவே முடியவில்லையே!கிட்டத்தட்ட இரண்டு மூன்று நாட்களாய் இப்படியேதான் அடிக்கிறது. இருந்தபோதிலும், இன்னிக்கு ரொம்ப அதிகம்தான் என்று தோன்றது. என்ன சொல்றீர்"

"சொல்லறதென்ன! அதுதான் மண்டையைப் பொளக்கிறதே; கொஞ்சம் மத்தி[illegible]னம் மோடம் கட்டித்து; என்னமோ மழையைக் காணோம்."

ஆதித்யர் "மழையாவதுமழை! வெயில் பலமாய் அடிச்சால் மழைவரும் என்கிறார்கள்; ஆனால் ஒன்றுமில்லையே; நேத்திக்குந்தான் இருந்தது மத்தியானம் அதிக மேகம்: சாயங்காலம் அசாத்திய மாய்க்காத்தும் அடிச்சுது; அஸ்தமிக்கிறபோது கால்வரிசை மேகம்கூட இல்லை, சந்தியாவந்தனம் பண்ணிவிட்டுத் திரும்பிவரும்போது ஆகாசம் அப்பு அழுக்குக் கிடையாது."

"தெரியாதா சுவாமி உங்களுக்கு மத்தியானம் மேகசஞ்சாரம்; இராத்திரி நிர்மலம் ஆகாசம்; இது துர்பிக்ஷ லக்ஷணம் என்னு?"

"ஐயா ஸோமஸ்கந்தரே! துர்பிக்ஷமோ சுபிக்ஷமோ; வரத்தைப் பொறுக்கத்தானே வேணும்: என்ன சொல்றீர்?"

"சொல்லறது என்னையா! சும்மாத் தொன்னு தொன்னு என்னுகிண்டு! கூப்பட்க்கூப்பட என்னவோ பேசிண்டே இருக்கிரே! பூணப்பட்டையை எறிந்துவிட்டு வாரும் ஐயாபோவாம்; இந்த லாபத்தை ராஜாவீட்டுக் கல்யாணத்துலே எடுத்துடலாம் காத்தியாயனரிடம் சொல்லி உம்மை வேதிகையிலேயே உட்காரவக்கிறேன் வாரும் ஐயா."

காத்தியாயனர் பிரதாபசிங்கா வீட்டுப்புரோகிதர்; மஹாவித்துவான்; மூன்று வேதம் அத்தியயனம் செய்தவர். குணமோ தங்கந்தான். தன்போன்ற வைதீகர்கள்மேல் பிரியம் உண்டென்பது சொல்ல வேண்டுவதில்லை; அது வைதீகர்களுக்கே இயற்கையான குணம். அரசன் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விசே

ஷத்துக்கும் தன் இனத்தாரை முறையே அழைத்துச்சென்று எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வின்றிப் பிரயோஜனம் செய்துவைப்பார். ஆகையால் அவரைத் தூஷிக்கும் வைதீகனே கிடையாது உதயபுரியில்.

அரண்மனையிலும் அவருக்கு அதிக மரியாதை. அவருடைய அற்புதமான கல்வியையும், கூரிய புத்தியையும், அமைதியான குணத்தையும் பார்த்துப் பிரதாபசிங்க ராஜனுக்கு அவரிடத்தில் அதிகபக்தியும் மரியாதையும் உண்டு. அவரது தூயமனத்தையும் அடக்கத்தையும் பார்த்து இராணிக்கும் அந்தப்புரத்து …திரீகளுக்கும் அவரிடத்தில் அதிக அன்பு. அவருடைய ஸமயோசித புத்தியைப் பார்த்து மந்திரி சுமதிக்கு மிகவும் சந்தோஷம். இப்படி எல்லாரிடத்தில் "எள் என்பதற்குமுன் எண்ணெய்" என்று ஒருவருக்கும் முகம் கோணாமல் நடந்து கொள்ளும் திறமையுடையவர் நமது காத்தியாயனர்.

காத்தியாயனர் என்ற பெயரும் கல்யாணம் என்ற வார்த்தையும் ஆதித்யநாதர் காதில் விழுந்ததுதான் தாமதம். உடனே பூணூல் பட்டையை எறிந்துவிட்டு "அடீ! இதை எடுத்துவை" என்று உட்புறம் திரும்பிச் சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் வந்தார் நடுத்தெருவுக்கு. வந்து ஸோமஸ்கந்தரண்டை போய்"என்ன ஐயா சமாசாரம்?என்ன கல்யாணம்?யாருக்குக் கல்யாணம்?சொல்லும் ஐயா!" எனக்கேட்டார். ஸோமஸ்கந்தர் "என்னவேடிக்கை சுவாமி!இதுகூடத்தெரியாதா?வெறுமனே எட்டுக்கால் பூச்சிபோலே மூலையில் உட்கார்ந்து பூணூல் நூத்தால் ஆய்விட்டதா எல்லாக் காரியமும்? லலிதாதேவிக்குக் . கல்யாணம் எ…‌ உமக்கு இன்னும் தெரியவில்லையா? என்…ங்காணும் கார்த்தாலே ஜாமப்போதுக்கே ஜோதி…புரியிலிருந்து ஜயபாலராஜாவுடைய அரமனை சர்வாதிகாரியாகிய இராமேசர் கடுதாசி கொண்டுவந்து விட்டாராமே; கல்யாணம் நிச்சயம் ஆய்விட்டது! நம்ம ஜோஸியர் முகூர்த்தம் வைக்கப் போயிருக்கிறார். அடுத்த மாதமாவது இந்த மாதக் கடைசியிலாவது முகூர்த்தம் நடக்கலாம்" என்று இவ்விதமாய்ப் பேசிக்கொண்டே வடக்குநோக்கி நதிக்குச் செல்லும் பிராமண உத்தமர்களைக் கண்டதும், "ஸோமு! ஸோமு!" என்று உரத்த கட்டைக்குரலுடன் ஒரு பிராமணர் கூப்பிட்டுக் கொண்டு ஒரு வீட்டிலிருந்து ஓடிவந்தார். வந்த வாமதேவ தீக்ஷிதர் "எத்தனைதரம அப்பா! கூப்படரது; கூப்பட கூப்பாட்டிலே கட வீதியே அதிர்றது. உங்களுக்குக் காதுகேட்கவில்லையே! என்ன அவ்வளவு பலமான ஹரட்டை? பாட்டுக்கச்சேரிக்குப் போவதாக உத்தேசமா? சரி; அதுதான்காதுகேட்கல்லே; என்னமோன்னு பாத்தேன் நானும்; சிறுபிள்ளேளோன்னே! நான் கிழவன் கூப்பிட்டால் காது கேட்குமா?" என்றார்.

ஆதித்யநாதர் —"என்ன ஐயா சொல்றீரு! இப்பொழுதுதான் ஸோமர் கல்யாணம் நடக்கின்றது என்றார். நீர் பாட்டுக்கச்சேரி என்றீர். என்ன சுவாமி உங்களுக்குப் பல சங்கதி எப்படியோ தெரியரதே! எனக்கு ஒன்றும் தெரியரதில்லே; என்ன சொல்றீர்!"

வாமதேவர். –"சொல்றது என்ன சுவாமீ! உள்ளேயே இருந்தால் என்ன தெரியும்? வெளியே போகணும், பத்துப் பேரை விசாரிக்கணும். அப்பென்ன தெரியப்போறது!"

ஸோமஸ்கந்தர்.—"அதிருக்கட்டும் தீக்ஷிதர்வாள்; பாட்டுக்கச்சேரி என்னேளே; எங்கே, எப்போ; விபரம் சொல்லும் சுவாமி".

வாமதேவர் — "என்ன அப்பா! எல்லாம் கல்யாண தடபுடல்தான் சொல்லணுமா என்ன; போலாம் வாங்கோ; நதியிலே போய் ஸந்தியாவந்தனம் பண்ணிவிட்டு நேராய் அரமனை மந்திராலேசனை மண்டபம் போக வேண்டியதுதான்; இன்னிக்குக் கோவிலுக்குக்கூடப்போகவேண்டாம். தர்மகர்த்தாவே பாட்டுக் கேட்க வந்திடுவர்; திராவிட சீமையிலிருந்து சரபன் என்று ஒரு வித்துவான் வந்து இருக்கிறாராம். அவர் வீணைவாசித்தால் கல்லே உருகுமாம். தவிர, திராவிட சீமையில் சில சமையாசாரிகள் பாடியிருக்கிற பக்திப் பாட்டுகள் பாடுவதில் சாமர்த்தியசாலியாம்; அப்பாட்டுகளைப் பாடும்போது உண்டாகும் மன உருக்கம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாதாம். இதோ பாருங்கள் ஜனங்கள் நாலுபக்கத்திலிருந்தும் போய்க்கொண்டிருக்கிறார்கள்.ஒரே ஓட்டமாய்ப்போய் ஸந்தியாவந்தனம் முடிப்போம்; அப்படியே குறுக்குவழியாக ஓடவேண்டியதுதான் ஊராதேயுங்கள்; நடவுங்கள் விசையாய்."

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### நன்னெறி : IV.

இது ஒரு விசாரமற்ற வாழ்க்கையாக அமைந்தது. அப்பர்ணசாலையில் வஸிப்பதும், பிரதி வெள்ளிக் கிழமையும், வரும் ஜனங்களுக்கு ஹிதோபதேசஞ் செய்வதும், அவர்கள் கொண்டுவந்து உதவும் பதார்த்தங்களைப் புஜித்துப்பசியாறுவதுமாகக் காலத்தை அவன் கழித்தான். நடப்பட்ட மூன்று மாதுளங் கட்டைகளுக்குநீரிட்டு வளர்க்கமறந்தவனல்லவென்று நாம் சொல்லுவது அநாவச்யம்.

இப்படியாக ஒரு வருஷம் சென்றது. மாந்தோப்புப் பங்களாவில் வஸித்தபொழுதுஸரஸ்வதி ஆலயத்திலிருந்த புஸ்தகங்கள் முழுவதும் படித்தான் என்றோமல்லவா? அதனால், அங்குவந்து கூடும் மனிதர்களுக்கு உபதேசம் செய்யும் விஷயங்களிலும், அவைகளையெடுத்துச் சொல்லும் மாதிரியிலும், நல்ல சக்தி பெற்றிருந்ததால், இவன் செய்யும் உபந்யாஸங்களின் பெருமை வெகுதூரம் பரவியது. தூரதேசங்களிலிருந்துகூட இவனைப் பார்ப்பதற்கு வந்தவர் அநேகர். மிகுந்த பக்திமானென்றும், காயஸித்தியுள்ளவனென்றும் பெயருண்டாயிற்று. தன் ஆத்மாவின் அபிவிர்த்திக்காக ஏதோவொரு ஸூக்ஷ்மமான வழி கண்டுபிடித்து அதற்காக, தன்வாயால் ஜலங்கொண்டுவந்து ஏதோ செடிவளர்க்கிறாரென ஓர்வதந்தியுண்டாயிற்று. எதற்காக அவ்வாறு செய்கிறார் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. தங்களுக்குப் புரியாதவிஷயத்தில் ப்ரமையும், கௌரவ புத்தியும் மனிதர்க் குண்டாவது ஸகஜந்தானே? ஆகவே, கீர்த்தி பரவப்பரவ எங்கிருந்தெல்லாமோ, பலவித காணிக்கையுடனும், ஜநங்கள் வந்து இவனைத் தரிசித்துப் போவார்கள். தனக்கு ஜீவநத்துக்குஅத்யாவச்யகமானதை மட்டும் கிரஹித்துக்கொண்டுமற்றவைகளை அவன் புறக்கணித்து விடுவான். அவனுக்கே வரவர 'இப்படிவாழும் வாழ்வுதான், பாபத்திற்கு ப்ராயச்சித்தம் போலும் எனத்தோன்றியது.

இரண்டு வருஷங்கள் கடந்தன. ஒரு இரவாவது தவறாமல் ஜலம் விட்டுவந்தபோதிலும், ஒரு கட்டையாவது, ஒரு சிறு தளிர்கூட விடவில்லை. இதுமட்டும் கொஞ்சங் கவலையை விளைத்தது. செடிகள் துளிர்த்த வுடனல்லவா ப்ராயச்சித்தமுடிவு என்று சொன்னார் ஸந்யாஸி? ஏதோ பார்க்கலாம் என்று பொறுமையோடு காலங் கழித்துவந்தான்.

ஒருநாள் பர்ணசாலைக்கு வெளியில் நின்று ஸுகமாகக் காற்று வாங்குகையில், தன்னெதிரே, நல்ல ஜாதி அச்வமொன்றில் ஆரோகணித்து, கையில் பிடித்த ஒரு பிச்சுவா வுடனும், அரையிற் கட்டிய வோர் கத்தியுடனும் இளமையும், நல்ல வஜ்ர சரீரமும் பெற்றவொரு வாலிபன் செல்வதைக் கண்டான். அவனைக் கூப்பிட்டு "நீ யாரப்பா? இங்கெங்கு செல்கிறாய்? என்ன கார்யார்த்தமாக இங்கு வந்திருக்கிறாய்?" என்று உசாவினான்.

"நானா? நான் கைதேர்ந்த ஓர்வழிப்பறிக் கொள்ளைக்காரன். ஒரு நகரத்திலிருந்து மற்றொன்றிற்குச் செல்லும் ப்ரயாணிகளின் பொருளை யபகரிப்பதே என் தொழில்; குலதர்மம். ஆக்ஷேபிக்கும் ப்ரயாணிகளை இக்கட்கத்தால் ஒரே போடாய்ப் போட்டுவிடுவதில் எனக்கு மிகுந்த திருப்தி" என்றான் அவன்.

பார்த்தான் பர்ணசாலை சிஷ்யன். "என்ன அக்ரமம்! இக்கொடுஞ் செயல்களைச் செய்வதுமல்லாமல், அதையொரு பெருமையாகவு மல்லவா பேசுகிறான்? இவ்வித துஷ்டனை நல்வழிக்குக் கொண்டுவருவதெப்படி? இவன் தீய வெண்ணங்களை யகற்றுவதெவ்விதம்?" என்று இவன் எண்ணமிடுகையில் திடீரென்று வேறொரு யோசனை தோன்றிப் பயத்தை விளைத்தது. "ஒருக்கால் இக்கொள்ளைக்காரன், இப்பிரதேசங்களிலேயே வாஸஞ் செய்யவாரம்பித்து, வெள்ளிக்கிழமைதோறும், காணிக்கையோடு என்னைக் காணவரும் ஜனங்களை யடித்துப் பறித்தால், அவர்கள் பயந்து இங்கு வருவதை யொழித்துவிட நேரிடும். என்னுடைய தர்மோபதேசமு மவர்களுக்கு இல்லாமற்போய்விடும். அவர்களால் எனக்குக் கிடைக்கும் உதவியும் போய்விடுமே! பின்பு நான் ஜீவனத்திற்கு என்ன செய்வேன்?" என்ற திகிலுண்டாயிற்று. திருடன் பக்கந் திரும்பினான். "அப்பா, நீ செய்யுங் கார்யம் மிகுந்த பாபஹேதுவானது. அதனால் நரகப் பிராப்திதான் கிடைக்கும். இவ்வழியைவிட்டு,

ஈர வெங்காயத்திற்கு இருபத்தெட்டுப் புரை,

நன்னெறியைக் கைப்பிடித்துக் கடவுளை வழிபட்டொழுகு. நிச்சயம் உன்னைப் பகவான் ரக்ஷிப்பார். இல்லாமல், நீ உன் மனம்போன போக்கேபோய், பாபமூட்டையை ஸம்பாதித்துக்கொள்ள இஷ்டமானல் வேறிடத்திலாவது சென்று உன் வ்யாபாரங்களை வைத்துக்கொள். இங்கு என்னிடம் உபதேசம்பெற வருபவர்களையெல்லாம் அக்யாயமாய்ப் பயமுறுத்தி விரட்டாதே. உன் ஒருவனல் ஏன் அவ்வளவு ஜீவன்கள் கஷ்டத்திற்கு உள்ளாகவேண்டும்?'' என்று மொழிந்தான்.

இதைப் பொறுமையுடன் கேட்ட அவ்வழிப்பறிக்காரனும் 'இடி இடி' யென்று சிரித்துவிட்டு, ''ஏய், உன்னையுந் தெரியும், உன் கடவுளையுந் தெரியுமெனக்கு. நீ எனக்கொன்றுமே சொல்லத்தேவையில்லை. உன்னிடம் உபதேசத்திற்குவரும் கிழவிகளுக்கு வைத்துக்கொள்ளு இந்தக் கதையையெல்லாம். ஒவ்வொருவனுக்கும்வெவ்வேறுவழிஜீவனோபாயத்திற்கு. னக்கு உன் உபதேசத்தினல் பிழைப்பு; எனக்குவழிப்பறியினல் பிழைப்பு அவ்வளவுதான். இதில் கடவுளென்ன, மண்ணென்ன? நான் இதுவரைசெய்த கொலை களவுகளுக்கு உன் கடவுள் என்ன செய்துவிட்டார் என்னை? இவ்வளவு பக்தனன உன்னையாவது ரக்ஷிக்கிறரா பார்க்கலாமா? உன்னை இந்தப் பிச்சுவாவால் கொஞ்சம் கீறிவிடவா? போனல் போகிறது. முதல் தடவை மன்னித்தேன். இனிமேல் என் வழியில் குறுக்கிடாதே. வந்தாலும் இந்தமாதிரி தாறுமாருய் உளராதே. பத்ரம்'' என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டான். பிறகு கண்ணில் படவேயில்லை. முன்போலவே சிஷ்யனும் ச்வஸ்தமாகப் பர்ணசாலையில் வஸித்துவந்தான்.

மேலும் எட்டு வருஷங்கள் சென்றன. ஒரு வெள்ளிக்கிழமை, எப்போழுதும்போல் மாதுளஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துவிட்டு, பர்ணசாலையில் வந்துட்கார்ந்து யாராவது வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான். அன்று ஊரில் திருவிழா. அம்மன் 'தபஸ்' செய்யப் புறப்படுவது வெகு அழகாயிருக்குமாகையால், ஸகல ஜனங்களும் அங்கு சென்றுவிட்டார்கள். இங்கே ஒருவரும் வரவேயில்லை. அதனல் மனதில் அதிருப்தியும், துக்கமுமுண்டாயிற்று: மனம் எங்கெங்கோ கவலை பாய்ந்தது. நடுவில் எட்டு வருஷங்களுக்குமுன் 'உனக்கு உன் உபதேசத்தால்பிழைப்பு' என்றுவழிப்பறிக்காரன் சொன்னது ஞாபகத்துக்கு வர, அவன் யோசிக்கவாரம்பித்தான். ''நமது குருஸந்யாஸியின் கருத்தின் ப்ரகாரம் நான் வாழ்வதாகத் தோன்றவில்லை. இக்காட்டில் ப்ராயச்சித்தமாகத் தனியே யிருந்து கையிற் கிடைக்கும் காய் கனிகளைப் புஜிப்பது அவர் நோக்கமாயிருக்க, நான், உபதேசமூலமாய்எல்லாவித ஸாமக்ரியைகளும் வரும் ஒரு நல்ல வழியைத் தேடி, ஸுகஜீவனம்பண்ணிவருகின்றேனே! என்னுடைய படிப்பையும் வாக்சாதுர்யத்தையும் பிறர் ஸ்தோத்தரிப்பதில் திருப்தியுண்டாகிக் களிக்கிறேனே. அடடா, எவ்வளவு அகங்காரத்திற்கு இடங்கொடுத்துவிட்டேன்! இன்று ஒருவரும் வராததால் என்ன நஷ்டம் வந்துவிட்டது? ஏன், இவ்வளவு அதிருப்தி யேற்படவேண்டும்? ஆகவே, இப்பர்ணசாலையை விட்டுவிட்டு, மனிதர்கள் நம்மைக் கண்டுபிடிக்க முடியாத ஒருஸ்தலத்தில் ஏகாந்தமாக இருந்து கந்தமூலபலாதிகளைப் புஜித்துக் காலத்தைக் கழிப்பதே ப்ராயச்சித்தத்திற்கு வழியாகும்'' என்ற முடிவிற்கு வந்ததும், அங்கிருந்த ஸாமான்களை யெடுத்துக்கொண்டு, அத்தோப்பின் இறுதியிலுள்ள காட்டில் நுழைந்தான். எட்டு வருஷங்களுக்கு முன்கண்ட வழிப்பறியோன் அங்கு அவன் எதிரே தோன்றினன்.

''ஏ ஸந்யாஸி, ஸாமான்களை யெல்லாந் தூக்கிக் கொண்டு எங்கு போகிருய்? வேறு ஏதாவது இடம் போய்விட உத்தேசமா என்ன?'' என்று அவன் கேட்டான்.

''எட்டு வருஷங்களுக்குமுன் நீ சொன்ன சொல்என் மனதில்பட இவ்வளவு நாளாயிற்று. இப்பொழுதாவது பட்டதே யென்று ஸந்தோஷம்.''

''இதென்ன விசித்ரம்! நான் என்ன சொன்னேன்? அதனல் நீ இப்பர்ணசாலையை விட்டுப் போவானேன்?''

''உனக்கு உபதேசத்தால் பிழைப்பு என்று நீ சொல்லவில்லையா? அதுதான் காரணம். காட்டில் தனியேயிருந்து காயக்லேசாதிகள் செய்ய வேண்டியிருக்க, ஸுகஜீவனத்திற்கு வேண்டியவழியைத் தேடிக்கொண்டது தவறல்லவா?''

''அதனல்?''

யுகமுடிய மழைபெய்தாலும், ஓட்டாங் இளிஞ்சில் பயிர் ஆகுமா?

"அதனுல், மனுஷ்ய ஸஞ்சார மில்லாத இடமாகத் தேடி அங்கு காலத்தைக் கழிக்க உத்தேசித்துப் போகிறேன்."

"இங்குதான் உன் தரிசனத்திற்காக வருஞ் ஜனங்கள் வேண்டுவன கொண்டுவந்து தவினுர்கள். நிர்மானுஷ்யமான இடத்தில், உனக்கு உணவு கிடைப்ப தெப்படி?"

"எதற்கும் பகவானல்லவா இருக்கிறுர்? அவரைவிடப் புல்லறிவாளரான நமக்கென்ன தெரியும்! 'கல்லினுட்டேரைக்குங்கருப்பையண்டத் துயிர்க்கும்' உணவளித்து ரக்ஷிக்குங் கருணுநிதியின் ஆஜ்ஞை யெப்படியோ, அப்படி நடக்கட்டும். நாம் நெடுந்தூரந்தா னினைந்து நெஞ்சம் புண்ணுவா னேன்?"

இதைக்கேட்டதும் ஆச்சர்யத்துடன் அத்திருடன், ஒருதடவை, கூர்ந்து நோக்கிவிட்டுயோசனையில் அழுந்தியவனுய் ஒன்றும் பேசாது ஏதோ பலமான அவ்விடத்தைவிட்டகன்றுன்.

அவன் மறைந்த பிறகு சிஷ்யனுக்குக் கொஞ்சம் பச்சாத்தாப முண்டாயிற்று "அடாடா, அவனுக்கு நல்லபுத்தியாக இரண்டுவார்த்தையேனுஞ் சொல்லாது ஏன் செல்லவிடுத்தோம்? முன்னம் இருந்ததைவிட இன்று கொஞ்சம் சாந்தமாகத் தோன்றினுனே. இன்று சொல்லியிருந்தால், அவன் மனதில் பட்டாலும் பட்டிருக்கும்" என்று தோன்றவே, பத்தடிதிருடன் போன திசையில் ஓடினுன். யோசனையால் அடிமேல் அடிவைத்துச் செல்லும் அத்திருடனைக் கண்டு, அங்கு நின்றபடியே "அப்பா, இப்பொழுதாவது நான் சொல்வதைக் கேள். உன் தீய வொழுக்கங்களை விட்டொழி. கடவுளின் கருணை, கரையற்ற கடல். உனக்கு நல்ல கதியுண்டாகும்" என உரக்கக் கத்தினுன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் திரும்பிப் பதிலொன்றும் பேசாது, கையிலிருந்த பிச்சுவாவை உயரத்தூக்கியசைத்து "ஏலங்யாலி இம்முறையும் மன்னித்தேன். இனிமேல் என்வழிக்குவந்தாயேல், நீ இதற்கு இரை யென்பது வித்தம்" என்று ஸங்கேதமாகக் காண்பித்தான்.

இதிலொன்றும் பயனில்லை என்று கண்டு தெளிந்த சிஷ்யனும் வ்யஸநத்தோடு திரும்பிப் புதுவிடமொன்று அமர்த்திக் கொண்டான். மறுநாட்காலையி லெழுந்து மாதுளங்கட்டைகளுக்கு ஜலம் வார்க்கப் பர்ணசாலையண்டை போவானுே! என்ன வாச்சர்யம்! ஒருகட்டையானது வெகு மனோரம்யமாகத் துளிர்கள் பல விட்டிருப்பதைக் கண்டான். ஏதாவது மனப்பிராந்தியோ என்று கண்ணைத் துடைத்துக் கொண்டான். இல்லை வாஸ்தவமாகவேதான் துளிர்விட் டிருந்தது. ஆநந்தப் பெருக்கால், அவன் கூத்தாடினுன்; கடவுளை மனதார ஸ்தோத்தரித்தான்; தனது பாபமொழியுங் காலம் நெருங்கி விட்டது என்று எண்ணி யெண்ணிக் களித்தான்.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

### CHILDREN'S PAGES

### ஆஸிம், அல்லது கடவுளும், அவர் சிருஷ்டியும்.

டாரிஸ் மலையின் உன்னதமான சிகரங்களில் தூரப் பார்வைக்கும் தென்பட்ட பல பெரிய பாறைகளும் அருவிகளும் உண்டு. அருவிகளின் சுத்தமான தண்ணீர் அசைந்தபடியே இருந்ததனுல், அவைகளின் கீழிருந்த பாறைகளும் ஆடிக்கொண்டே காணப்பட்டன. மலைச் சிகரங்கள் புற்பூண்டுகளு மில்லாமல் பனியினுல் வெண்பட்டுப் போர்த்தாற்போல் தோன்றின. அப்பயங்கரமான சிகரங்களொன்றில் மனிதர்களை வெறுத்து மானுஷ்ய சஞ்சாரத்தைவிட்டு ஆஸிம் என்பவன் வசித்து வந்தான்.

ஆஸிம் இளைஞு யிருந்த காலத்தில் மனிதர் மத்தியில் இருந்து அவர்களோடு களித்துக் கூத்தாடிச் சந்தோஷமா யிருந்தான். தன் சொத்தை யெல்லாம் ஏழைகளுக்கு அளித்து, பெருந் தருமம் புரிந்து, மேன்மையானுன். பல்லைப் பரக்கக் காட்டிக் கெஞ்சியவனும், நடக்க முடியாத பிரயாணியும், அவன் வீட்டிற் புகுந்து வயிறு நிரம்ப உண்டு சந்தோஷமாக வெளிச் செல்வார்கள். செல்வம் சென்றுவிடுமாகையால், ஆஸிமின் சொத்துச் சில நாட்களிற் கெல்லாம் மிகவும் குறைந்து, கடைசியாக ஒன்றுமில்லாமல் போய்விட்டது. அவ

னுடைய நற்செய்கைகளுக்கும் முடிவுவந்தது.

தான் மற்றவர்கட்கு உதவிபுரிந்ததுபோலவே தன் க்ஷீண காலத்தில் தனக்கு அவர்கள் அவ்வாறே செய்வார்களென்று, அவன் எதிர்பார்த்திருந்தான். தான் நினைத்தவாறு ஒன்றும் நடக்காதது கண்டு, தான் காப்பாற்றிய சிலரைப் பணத்திற்காகப் போய்ப்பார்த்தான். நன்றியறிவில்லாத அம்மனிதர்கள் ஆலிமின் ஏழ்மைத்தனத்தைக் கண்டு அவனை அலட்சியம் செய்தனர். மற்றும் சிலர் அவன் ஸ்திதியைக் கண்டு முதலில் பரிதாபப்பட்டாலும் நாளடைவில் அவ் விரக்கம் மாறுபட அவனை இகழ ஆரம்பித்தார்கள். ஆலிம் உலகத்தோரின் உண்மையான குணத்தைக் கண்டு உலக வாழ்வை வெறுக்க லானான். தான் இதன் முன் நினைத்தறியாத பல பாவங்களைக் கண்டான்; நன்றிமறந்தவரும், கள்ளங்கபடுடையவரும், பொய்ஞரும், துன்மார்க்கரும் எங்கும் நிறைந்திருந்தார்கள்.

தான் வெறுத்த உலகம், தன்னை இழிவதைச் சகிக்க முடியாமல், தனக்கு அதுவரைக்கும் குற்றமே செய்யவில்லை யென்று நிச்சயமாய்த் தெரிந்த உள்ளமாகிய தன்மனதுடனே மேற்சொல்லிய பயங்கரமான டாரிஸ் மலையின் உச்சிக்குச் சென்று அங்கு வசிக்கலானான்.

வெயில், மழை, பனி, காற்றுகளினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஓர் குகையைத் தவிர வேறில்லை. கஷ்டப்பட்டுத் தோண்டியெடுத்த புற்பூண்டுகளே அவன் ஆகாரம். குடிக்கவோ செங்குத்தான பாறைகளின் மேல் ஓடின அருவிகளிலிருந்து, தான் கொண்டுவந்த தண்ணீரைத் தவிர வேறு யாது மில்லை. இவ்விதமாக, ஆலிம் மனிதரைவிட்டுத் தனியாக வசித்துக்கொண்டு, தன் காலத்தை வீண்போக்காமல் கடவுளைத் துதித்துவந்தான். சமயங்களில் தன் இழிவான வர்க்கத்தாரை யகன்று, அவர்கள் உதவியில்லாமல் வசித்துவந்ததைக் குறித்துச் சந்தோஷப்படுவான்.

மலையடிவாரத்தில் விசாலமான ஏரி ஒன்று மேலிருந்த பயங்கரமான மலையைப் பிரதிபிம்பித்துக் காட்டிக்கொண் டிருந்தது. ஆலிம் சில சமயங்களில் பாறைகளின்மேல் நின்று தன்முன் தோன்றிய விசாலமான கண்ணாடி போன்ற ஏரியை ஆவலோடு பார்ப்பான். ஒரு நாள் அவ்வாறு பார்த்துக்கொண் டிருக்கிற பொழுது, பின்வருமாறு தனக்குள் தான் பேசிக்கொண்டான். "இவ்வியற்கைப்பொருள் எவ்வளவு அழகுட னிருக்கின்றது! என் கீழிருக்கும் இந்தச் சமமான ஏரி, மேகக்கூட்டங்களின் இடையில் மறைந்துள்ள சிகரங்களைப்போல் சற்றாவது அமைந்திருக்கின்றதா? இல்லையே. ஆயினும் யாரையும் பயப்படச் செய்கின்ற அம்மலைக்கு அழகா இல்லை? மனிதனைத் தவிர எல்லாச் சிருஷ்டிப் பொருள்களும் மனதிற்கு எவ்வளவு சந்தோஷத்தை யுண்டாக்குகின்றன? ஆனால் நான் அழகைக் குறித்தே யோசித்தேனன்றி உபயோகத்தைச் சற்றும் கவனித்தே னில்லை. தாங்கள் செல்லும் இடங்களுக் கெல்லாம் சௌகரியத்தைக் கொடுக்கும் பல ஆறுகள் இம்மலையிலிருந்துதானே உற்பத்தியாகின்றன. இவ்வுலகின் ஒவ்வொரு பாகத்திலும் அழகு, அறிவு, நியாயம் எல்லாம் குடிகொண் டிருக்க மனிதன்—அற்பமனிதன்-இயற்கையின்பிழையாகவும், சிருஷ்டிப் பொருள்களில் ஓர் அரக்கனாகவு மிருக்கின்றானே! சூறைக் காற்றுங் கூடப் பிரயோஜனப்படுகின்றது. மனிதனே சற்றும் நன்றியறியாதவனாய், தான் மற்றவர்கட்கு நன்றி செய்யாதபோதிலும் தனக்கு அப்படிச் செய்தவர்களையும் மறந்து, அதோடு நிற்காமல் அவனைத் தூஷிக்கவும் துணிகிறான். என்னை ஏனோ கடவுள் இப்பாழும் ஜன்மமெடுக்கச்செய்தார்? அவர் சிருஷ்டித்த இம்மானிட ஜன்மமே அவர் அறிவைத் தாழ்த்தும் போலும்! இம்மானிடர் மாத்திரம் தங்கள் துர்நடத்தையை விட்டால், இவ்வுலகத்தின் ஸ்திதியையும் சொல்லவேண்டுமோ! எங்கும், ஒற்றுமையும், அன்பும், சந்தோஷமும் குடிகொள்ளுமன்றோ? ஆ கடவுளே! இது உன் உலகமாயின் இது ஏன் இந்த ஸ்திதியிலிருக்க வேண்டும்? எதற்காக, நான் சஞ்சலத்திலும், ஏக்கத்திலும் ஆழ்ந்திருப்பதைப் பார்த்துக்கொண் டிருக்கிறீர்?"

சஞ்சலமும் ஏக்கமுங்கொண்டு, தன் சஞ்சலத்தை நிவர்த்திக்க ஆலிம் தீர்மானித்து, தான் நின்றிருந்த பாறையின் கீழிருந்த ஏரிக்குள் தாவ ஆயத்தப்பட்டான். அப்பொழுது ஏரியின்மேல் தரையில் நடப்பதுபோல

உடல் ஒருவனுக்குப் பிறந்தது, நா பலருக்குப் பிறந்தது.

நடந்து தன்னை நோக்கி ஓர் உருவம் வருவதைக் கண்டான். தான் சற்றும் எதிர்பாராத காட்சியைக் கண்டதும், குதிக்கப் போனவன் ஸ்தம்பம்போல நின்றான். அவ்வுருவம் வெகு கம்பீரமாக இருந்தாலும், பார்ப்பவரைப் பயப்படச் செய்ததாலும் ஆஸிம் வாய்திறவாமல் நின்றான்.

"ஏ மானிடனே! நீ செய்யப் புகுந்த காரியத்தை நிறுத்து. கடவுள் உன் மேன்மைக் குணத்தைக் கண்டு மெச்சி உன்னுடைய சந்தேகங்களை யெல்லாம் நிவர்த்திக்க என்னை இங்கு அனுப்பியுள்ளார். நான் உன்னைக் காப்பாற்றிக் கரையேற்ற ஆயத்தமாயிருக்கின்றேன். உன்னை அழைத்துப்போகும் இடங்கட்கெல்லாம் பயப்படாமல், நீ என்னைப் பின்பற்றி வருவாயாக. நான் யார் என்று அறிய மிக்க ஆவலாயிருப்பாயாதலால், என்னைச் சஞ்சல ஸம்ஹாரி என்று அறிந்துகொள். சரியான வழியை அறியாமல் திண்டாடுபவரையும், ஏக்கங் கொண்டவரையும் நான் கரையேற்ற வல்லவன்" என்று அவ்வுருவம் ஆஸிமைப் பார்த்துச் சொல்லிற்று.

உருவம் முன்னும், ஆஸிம் பின்னுமாக ஏரியின் மத்தியம் வரைக்கும் நடந்து சென்றார்கள். அங்கு வரவும், அதுகாறும் தண்ணீர்மேல் நடந்துவந்த இருவரும், மூழ்க ஆரம்பித்தார்கள். வெகு தூரம் தண்ணீருக்குள் செல்லவே, ஆஸிமுக்குச் சுவாசம் விட முடியாமல், தன் கடைசி காலம் கிட்டிவிட்டதோ என்று நினைக்கலானான். அச்சமயத்தில் தன் பாதம் தரைதட்டியதைக்கண்டு சந்தோஷமடைந்தான்; மூடியிருந்த கண்ணைத் திறந்து பார்க்கவும், பல விநோத காட்சிகளைக் கண்டான். இப்பூவுலகத்திற்கு மேலே, எப்படி ஆகாயம் விளங்குகின்றதோ, அதே மாதிரி அவன் தலைக்குமேல் தோன்றியது. ஆனால் அவ்வானம் தண்ணீரினாலுண்டாக்கப்பட்டிருந்ததனால், சிறு அலைகள் பல தென்பட்டன. அதைப் பார்த்த பிறகு ஆஸிமும் சஞ்சல ஸம்ஹாரியும் நடந்து சற்றுத் தூரம் சென்றனர். அவர்களெதிரில் ஒரு செங்குத்தான பாறையிருந்ததால், சஞ்சல ஸம்ஹாரி அதில் தெரிந்த ஒரு துவாரத்தில் தானும் ஆஸிமுமாக நுழைந்து மற்றப் பக்கத்தில் போய்ச் சேர்ந்தார்கள்.

தான் சற்று முன் விட்டுவந்த உலகத்தில் தினந்தோறும் கிழக்கில் உதித்த சூரியனோவென்றும், தான் ஒரு வினாடிமுன் நின்றிருந்த உந்நதமான பாறையையும் உயரத்தில் சென்ற கரிய மேகங்கள் சஞ்சரித்த விசாலமான வானமோவென்றும் ஆஸிம் ஐயமுறும்படி ஒரு பிரகாசமான சூரியனும் விசாலமான வானமும் அங்கு இருந்தன. இதை யெல்லாம் அவன் கண்டு ஆச்சரியப் படுவதைப் பார்த்த சஞ்சல ஸம்ஹாரன், பின்வருமாறு சொன்னான் :—

"நீ ஆச்சரியப்படுவதன் காரணத்தை நான் நன்கு அறிகிறேன். இருந்தபோதிலும் சற்று வாளாயிரு. இவ்வுலகம் கடவுள் பக்தனொருவர் வேண்டுகோளால் உண்டாக்கப்பட்டது. அப்பக்தனும் உன்னைப் போலப் பல சமாசாரங்களறிய வெகு ஆவல்கொண்டிருந்தார். இவ்வுலகத்தில் அவர் சில நாட்களிருந்து தானறியவந்த சங்கதிகளெல்லாவற்றையும் தெரிந்துகொண்டபின் சென்றார். இவ்வுலகத்தவர் நீ வெகுவாய் விரும்பின நற்குணங்கள் பொருந்தியுள்ளார். அவர்களிடத்தில் யாதொரு துர்க்குணமும் கிடையாது. உனக்கு இங்கேயே வசிக்க ஆவலதிகமானால், யான் அதை மறுத்துக் கூறமாட்டேன். உன் மிகுந்த வாழ்நாட்களை இவ்விடத்திலேயே கழிக்கலாம். ஆனாலும் யோசனைசெய்து தீர்மானித்தலே நலம். பதறின காரியம் சிதறுமாகையால், இங்குள்ள மனிதர்களின் குணாதிசயங்களை முற்றும் அறிந்த பிறகு உன் மனதிற்கு எவ்வாழ்வு மேலானதென்று தென்படுகிறதோ அதன்படி செய். அதற்காக இங்கிருப்பவர் சிலரை நாம் போய்ப் பார்ப்போம். உனக்கு ஏதாவது விநோதமாகவோ அல்லது புத்தியில் படாததாகவோ தோன்றுமேயானால் என்னைக் கேட்டு அச்சங்கதிகளைத் தெரிந்துகொள்."

ஆஸிம்.—துஷ்கிருத்யமில்லாத உலகம்! துன்மார்க்கமறியாத மனிதர்! ஈதும் ஓர் புதுமையே. சர்வேச்வரனுடைய வல்லமையையும் சொல்லி முடியுமா? அல்லது இந்நிமிடம் யான் ஆழ்ந்திருக்கும் ஆனந்தத்தின் அளவையும் குறிப்பிடக் கூடுமோ! இனி நான் சற்றும் இவ்வுயிரை இகழேன். நன்றியறிதல், நியாயம், பொய்யின்றி மெய்யே பேசுதல், தன் கடமையைச் சரிவர நிகழ்த்தல், இன்னும் பல புண்ணியச் செயல்களையே கைப்பிடித்த மானி

உண்பாரைப் பார்த்தாலும் உழுவாரைப் பார்க்கல் ஆகாது.

டரோடு கூடி வாழ்வதைக் காட்டிலும் இன்பமுண்டோ?

உருவம்.—இம்மாதிரிப் பிதற்றுதலைவிட்டு, உன்னைச் சுற்றி நடந்தேறும் செய்கைகளின் காரணங்களையும் உட்கருத்தையும் அறிய முயற்சிசெய். நீ எங்கு செல்லப் பிரியங்கொண்டாலும் உன்னை அங்கு அழைத்துப் போக யான் இருக்கிறேன். உனக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றி என்னைக் கேட்டால், நான் அவைகளை விளங்க உனக்குச்சொல்லுகிறேன்.

ஆஸிமும் உருவமும் பேசாமல் சற்றுத் தூரம் சென்றார்கள். ஆஸிமுக்கு அடங்காச் சந்தோஷமே மேலிட் டிருந்தது. எங்கு பார்த்தாலும் தான் சற்றுமுன் இருந்த உலகமோ என்று அவனைப் பிரமிக்கச் செய்யத்தக்க பல காட்சிகள் அவன் முன் தோன்றின. ஆனால் அடர்ந்த காடுகளும், உழவுகோலின் உதவியே இல்லாத பல விசாலமான இடங்களும் அவனிருந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டுச் சில காலமே ஆயிற்றென்று நன்றாய்க் காட்டின.

ஆஸிம்.—இங்கிருக்கும் மிருகங்களிற் சிலவற்றுள், தங்களைக் காட்டிலும் பலமில்லாத மற்ற ஜந்துக்களைக்கொன்று தின்பதுபோலவே தான் மேலுலகத்திலும் இருக்கக் கண்டேன். இது எனக்குச் கொஞ்சமேனுஞ் சரியாகத் தோன்றவில்லை. நான் இவ்வுலகு சிருஷ்டிக்கப்படுங் காலத்தில் கடவுளருகில் இருந்திருப்பேனானால், ஒன்றை யொன்று புசித்து ஜீவிக்கும் மாமிஸ பக்ஷிணிகளை உண்டாக்க வேண்டாமென்று கேட்டிருப்பேன். அவை இருப்பதால், கடவுள் சிருஷ்டி நாளுக்குநாள் குறைந்து கடைசியாக நிர்மூலமாய்விடும்.

சஞ்சல ஸம்ஹாரி.—கேவலமான இச்சிறிய பிராணிகளிடத்தில்,உனக்கு இருக்கும் பிரியத்தைப் பார்த்தால், எனக்கு அதிக ஆச்சரியமாயிருக்கிறது. அவ்வுலகத்தில் எவ்வாறு சிறிய ஜந்துக்கள் பெரிய மிருகங்களுக்கு உணவாகின்றனவோ அவ்வாறே இங்கு இருந்தாலும், பல காரணங்களைக்கொண்டு உன் மனதை நிம்மதியாக்க எனக்குச் சக்தியுண்டு. தாவரங்களையே உண்டுஜீவிக்க எல்லா மிருகங்களும் நினைத்தால் இப்பூவுலகம் நிலைபெறுமா? மிருகங்கள் பெருகி தாவரங்கள் குறைந்து, மானிடரெல்லாம் கஷ்டப்பட நேரிடுமன்றோ? முன் காலத்து அரக்கர்களைத் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்செய்பவரான சாக்ஷாத்கடவுள் அழித்தது போல், மிருகங்களையும் அவரே வந்தாலன்றி அழிக்கக்கூடாமல் போகலாம். ஆதலினால் இப்பொழுது இருப்பதுபோல் இருந்தால்தான் எல்லோருக்கும் சௌகரியம். ஆனால் நாம் இவ்விஷயத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால், வேறொன்றும் பார்க்க முடியாது. இங்கு வசிக்கும் மானிடரின் குணநிசயங்களை நாம் சீக்கிரமாய் அறியவு முடியாது. ஆகையால் விரைந்து செல்வோம்.

ஆஸிம் வேகமாக நடந்தான். இருவரும் அவர்கள் இருந்த காட்டைக் கடந்து, பாவமறியாத மனிதர் வசித்த இடத்தை நெருங்கினார்கள். ஆஸிம், தான் புண்ணியமே உருவெடுத்துவந்து வசித்த நாட்டிற்குள் இருந்ததை நினைத்து நினைத்து மனம் பூரித்தான். அவ்வாறாக இருவரும் காட்டைக் கடந்து, ஊருக்குள் நுழைந்த காலத்தில், ஓர் விநோதக் காட்சி அவர்முன் தோன்றியது, பல அணில்கள் துரத்த கூக்குரலிட்டுக்கொண்டு ஓர் மனிதன் ஓடிக்கொண் டிருந்தான்.

"ஆ! கடவுளே! ஈதென்ன ஆச்சரியம்! அவன் ஓடுவது அதிசயமாக வன்றோ இருக்கின்றது? இச்சிறு பிராணியாகிய அணிலுக்கு அவன் பயப்படுவது வேடிக்கையன்றோ?" என்று ஆஸிம் சொல்லி முடிக்குமுன்னர், பலமுள்ள மனிதனொருவன், சிறு நாய்க்குட்டிகள் துரத்தப் பதறிக்கொண்டு இவர்களை நோக்கி வந்தான். அவன் ஓடினது, ஆட்டுக்குட்டி ஓநாயைக் கண்டு ஓடுவதுபோன்றிருந்தது. "கோழைகளாக வன்றோ இம்மனிதர் காணப்படுகின்றனர். நாயையும் அணிலையும் கண்டு பயப்படுபவர்களை நான் இதுகாறும் கண்டதே இல்லை. எனக்கு யாதும் தெரிய வில்லை" என்று ஆஸிம் சொன்னதைக் கேட்ட சஞ்சல ஸம்ஹாரி மேல்வருமாறு சொன்னான்.—

"இந்நாட்டில் ஒவ்வொரு பிராணியும் சில காலமாக, மிக வல்லமை அடைந்துவிட்டது. ஆரம்பத்திலிருந்தே இந்நாட்டார் பிராணிகளை வருத்துவதும் கொல்லுவதும் கிடையாது. அதினின்றும் எல்லா ஜந்துக்களும் பெருகி, மனிதருக்குப் பயப்படாமல். சிற்சில சமயங்களில் அவரையும் எதிர்க்கின்றன. மனிதர் ஜீவஜந்துக்களை ஹிம்சிக்காமலிருக்கும் பொழுதே, இவ்வளவு துன்பம் அவருக்கு நேரிடுமே

உண்மை சொல்லிக் கெட்டாரும் பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.

யானால், அவை ஒன்றையொன்று கொன்று ஜீவிக்காமலிருந்துவிட்டால், பிறகு என்னதான் நேரிடாது? இதிலிருந்து நீ உடனே ஜந்துக்களை ஹிம்சிக்காமலிருந்தால் கேடுவரும் என்று நினைத்துவிடாதே. சமயாசமயம் அறிந்து, எக்காரியத்தையும் செய்தல் வேண்டும்.”

**ஆஸிம்.**—நீ இவ்வாறு சொல்லிவிட்டால் நான் ஏமாறுவேனென்று எண்ணுகிறாய் போலும்! கடவுள் மனிதரையே முதன்மையாகச் சிருஷ்டித்தபடியால், அவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு தங்களுக்கு ஆபத்துச்சற்றும் வாராமலிருக்கும்படி செய்துகொள்ளுதல் அவருடைய கடமையே ஆகும். ஜீவஜந்துக்களை முற்றும் அழிப்பதே நியாயமானால், அவர் அவ்வாறு உடனே செய்யவேண்டும்.

**சஞ்சல ஸம்ஹாரி.**—எனக்கு அடங்காச் சிரிப்பு வருகின்றது. நீ சற்றுமுன் சொல்லியதை மறந்தாய்போலும்! மாமிசத்தைப்புசிக்கும் மிருகங்களைக் கடவுள் உண்டாக்கியதால், அந்த அத்தாக்ஷி அவரின்புத்தியீனத்தைமெய்ப்பித்ததாக நீ சொன்னாய். சற்று முன் ஜீவகாருண்யம் மேலிட்டிருந்த நீ, அதற்குள் எல்லா ஜீவன்களையும் அழிக்க வழிதேடுகிறாயே! இது ஓர் அபூர்வமே!

**ஆஸிம்.**—என் புத்தி தடுமாற்ற மடைகின்றது. அதற்குக் காரணம் இங்கு யான் காணும் காட்சிகளைத் தவிர வேறில்லை. நான் இப்பொழுது சொன்னதைப் பிசகென்று ஒப்புக் கொள்ளுகிறேன். நாம் பாவத்தைச் சிறிதும் கொள்ளக்கூடாதாகையாலும், ஜீவஹிம்சை அப்பாவத்தொழில்களில் முதன்மையானதாதலாலும், இப்பிராணிகளினால் நமக்கு உண்டாகும் தொந்தரவைக் கவனிக்காமல் நாம் இருத்தலே நலம். இது நிற்க, மனிதர்கள் இந்நாட்டில் எம்மாதிரி ஒருவர் மற்றொருவரோடு நடந்து கொள்ளுகின்றார்களென்று யான் பார்க்க ஆசைப்படுகின்றேன்.

அப்போது அவ்வுருவம் அவனைச் சற்று தூரம் அழைத்துச் சென்று, “நாம் இந்நாட்டார் வசிக்குமிடத்திற்கு வெகு சமீபமாகவே இருக்கிறோம்” என்றது. ஆஸிம் சற்றும் அதை நம்பவில்லை. அவன் கண்களுக்கு எங்கு தேடியும் மனிதர் வசிக்க வீடுகளாவது, கோபுரங்கள், கோவில் குளங்கள், மாடமாளிகைகள் முதலியனவாவது தட்டுப்படவில்லை.

சஞ்சல ஸம்ஹாரி, ஆஸிமின் எண்ணங்களை யூகித்து, அவ்வூரார், பகட்டிற்காக வீடுகள் கட்டாமல், குடியிருக்கப் போதுமான குடிசைகளில் வசிப்பதாகச் சொன்னான். மேலும் அவர் தங்கள் வீடுகளை அழகாகவும், பெரியனவாயும் கட்டினால், பார்ப்பவர்கள் பொறாமைப் படக்கூடுமென்றும், தாங்களும் கர்வமடையக் காரணமாகுமென்றும் நினைத்தார்கள். ஆதலினால், அவர் ஆடம்பரத்திற்கல்லாமல் வசிக்கவே குடிசைகள்கட்டினர் என்றான். இவற்றையெல்லாம் ஆஸிம் கேட்டு, “அப்படியானால் இந்நாட்டில் சிற்பிகளும், சித்திரக்காரரும், கொத்து வேலைக்காரரும் கிடையாது போலும்! ஆனாலும், அவ்வேலைகள் அவ்வளவு நல்லவையென்று தோன்றவில்லை. அவ்வேலைகளினால் சோம்பேறிகளே பிழைக்கிறார்கள். ஆதலால் சிற்பிகளும், சித்திரக்காரரும், கொத்து வேலைக்காரரும், இல்லாததுபற்றி சந்தோஷமே. இது நிற்க, தாங்கள் என்னை இவ்வளவு நல்ல நாட்டாரிடத்தில் சேர்ப்பித்ததற்காக, யான் எந்நாளும் தங்களை மறவேன். என் பிரிய வந்தனங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லா விஷயங்களைக் காட்டிலும் கல்வியறிவும் நற்குணமுமுடைய மானிடரோடு சம்பாஷிப்பதே மேல். அச்சந்தோஷத்தை யான் தங்கள் மூலமாகவே பெற்றிருக்கின்றேன்” என்று சொல்லும் பொழுதே, சஞ்சல ஸம்ஹாரி, “அறிவும் விவேகமும், கல்வியும் ஈங்கெங்கு வந்துள்ளது? விவேகமோ அல்லது அறிவோ என்னவானாலும் அவ்வார்த்தையை இங்கு சொல்லாதே. இந்நாட்டாரெல்லோரும், கல்வியறிவு பெற்றவரல்லர். ஏனெனில், அவர்களுக்கு அது அனாவசியம். உண்மையான அறிவு என்னவென்றால், நாம் செய்ய வேண்டிய கடமையையும், மற்றவர் நமக்கு செய்ய வேண்டியதையும் தெரிந்து கொள்வதே. ஒவ்வொருவனும் இயற்கையாகவே இச்சங்கதிகளை அறிந்திருக்க, விவேகம் இங்கு எதற்காக வரவேண்டும்? அப்படியல்லாமல், அறிவு என்பதற்கு, பிரயோஜனமற்ற சமாசாரங்களைத் தெரிந்து கொள்வதென்றும், வீண் சிந்தனையென்றும் நீ அர்த்தம் கொண்டிருந்தாய்; இந்நாட்டார் இக்குணங்கள்,

உதட்டுக்கு மிஞ்சின பல்லும் திருட்டுக்கு மிஞ்சின கையும் ஆகாது.

பொருளாசை, இச்சை, காமம், அகங்காரம், முதலியனவற்றினின்றும் உற்பத்தியாகின்றன என்று நன்கறிந்துள்ளார். ஆகையால் அடியோடு அவ்வழக்கங்களை மறந்து விட்டார்கள்.

**ஆஸிம்.**—ஈதெல்லாம் நியாய மென்றாலும், இந்நாட்டார் ஒற்று வாழாமல் தனித்தனியாக வசிக்கின்றனரே. ஒவ்வொரு குடும்பமும் இவ்வாறிருக்கக் காரணமேன்?

**சஞ்சல ஸம்ஹாரி**—எல்லோரும் ஒருங்கு கூடி வாழ இங்கு சங்கங்கள் ஏற்படுத்தப் படவில்லை. எல்லா சங்கங்களும் பயத்தாலாவது நேசத்தினாலாவது உண்டாகின்றன. இங்கிருப்பவரோ ஒருவரோடொருவர் சண்டைசெய்யாமலும், ஒருவருக்கொருவர் பயப்படாமலும் இருப்பவர்கள். மேலும் இரகஸிய சிநேகத்திற்கும் முகாந்திரங்களில்லை. ஏனெனில் யாவரும் பகிரங்க நேயர்களே. அதுபற்றியே எல்லோரும் தனித் தனியாக வாசம் செய்து கொண்டு தங்கள் வீடுவாசல்களை விட்டு அகலாமல் இருக்கின்றனர்.

**ஆஸிம்.**—சரி என் வாழ் நாட்களை இங்கேயே கழிக்க எனக்குச் சம்மதந்தான். நண்பர், கல்வியறிவுள்ளவர், சித்திரவேலைக்காரர் முதலிய எல்லோரும் இங்கு இல்லாத படியால் எனக்கு மாத்திரம் பேசிக்கொண்டிருக்க ஓர் மனிதனைத் தந்தால், நான் வெகு சந்தோஷப்படுவேன், என்றும் உமக்கு நன்றியறிவுள்ளவனாவேன்.

**சஞ்சல ஸம்ஹாரி.**—இப்படி இருவரும் பேசிக்கொண்டிருப்பதின் பயன் எனக்குத்தெரியவில்லையே. சம்பாஷணையில் முகஸ்துதி உண்டானாலும் உண்டாகலாம். அதைத் தடுக்க, இங்குள்ளவர், அதிகமாய்ப் பேசுவதே கிடையாது.

**ஆஸிம்** "என்ன எவ்வாறாயிருந்தாலும் கூட, எனக்கு இந்நாட்டாரையே பிடித்திருக்கிறது. இவர்களிடத்தில், பல குணங்களில்லாவிட்டாலும், அது நியாயமாக இருக்கின்றது. பல நற்குணங்களையே இவர்கள் கொண்டிருப்பதால், வருத்தமென்பதை இவர்கள் அறிந்திருக்க மாட்டாரென்று யான் நினைக்கிறேன். அது ஒன்றே, மற்ற எக்குறையையும் நீக்கும். மேலும் ஒவ்வொருவனும் தனக்கிருப்பதை வைத்துக்கொண்டு, சந்தோஷமாகவாழ்கிறான், மற்றவர் சொத்தின்மேல் ஆசையே கிடையாது. மானிடருக்கு, பொதுவாகவே, அவகாசம் அதிகம் உண்டு. ஆனால் அந்நேரத்தில் மற்றவரைக் கண்டு பொறாமைப்படுவதிலும் அளவுக்குமிஞ்சிச் சொத்தைச் சேகரிப்பதிலும் கழிப்பதனால், 'சூரியன் மிகவும் வேகமாய்ப் பிரயாணமாகிறான்' 'பொழுதுபோவதே தெரிகிறதில்லை', 'கலியுகம் கிட்டக்கிட்ட நாள் குறைகிறது' என்று பலவாறாகப் பிதற்றுகின்றனர். ஆனால் இவ்வுலகத்திலோ அவ்வாறில்லை. ஆகையால்இங்குள்ளவர், கஷ்டப்படுபவர்களைக் காப்பாற்ற சௌகரியமும், சாவகாசமும் கொண்டுள்ளார்" என்று சொல்லி வாய் மூடு முன்னர், அதி தீனக் குரலொன்று அவன் காதிற் பட்டது.

அக்குரல், ஓர் நிர்ப்பந்தன் பாதையோரத்தில் உட்கார்ந்துகொண்டு உண்டாக்கியது. தன் கடைசி காலத்தைப் பாதையோரத்திலேயே கழிக்க எண்ணி அங்கு உட்கார்ந்திருந்த அம்மனிதனை ஆஸிம் கண்டு, மனம் வெந்து, விரைவாய் ஓடி அவன் அருகில் நின்றான். அம்மனிதனோ க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு வருந்தினான்.

**ஆஸிம்.**—இது எனக்கு வியப்பையும் வெறுப்பையு மன்றோ தருகின்றது? பாவத்தையே கண்டிராத மானிடன், ஒத்தாசையின்றி வழியில் அனாதையைப்போல் இறப்பதுதான் நியாயமா?

**நிர்ப்பந்தன்.**—ஈதென்ன ஓர் ஆச்சரியமாகுமோ? தங்களுக்கு வேண்டிய அளவு உணவே வைத்திருக்கும் மானிடர், என்னைத் திருப்தி செய்வதற்காக, தங்கள் வயிற்றைப் பட்டினி போட்டால் அது கொடிய பாவமன்றோ? மேலும் அந்த உணவைக் கொடுக்கவும் மனம்தான் சம்மதிக்குமோ?

**ஆஸிம்.**—ஏன் அவர்கட்கு உணவுப் பொருள்கள் ஜாஸ்தி கொடுக்கக் கூடாது? ஆயினும் சற்று முன்தான் வேறு ஏதோ எண்ணங் கொண்டிருந்தேன். இங்கு எதுவும் சந்தேகத்தையும் மனக் கலக்கத்தையுமன்றோ உண்டாக்குகின்றது? இங்கு, நன்றியறிதல் என்னும் புண்ணியச் செயலே கிடையாது. ஒருவரிடத்தில் நன்மை பெற்ற பிறகன்றோ நன்மையை நாம் திரும்பச்செய்தல், அதற்கு இங்கு சாத்தியமில்லை. அதுதான் போகட்டும் என்றால், சுதேசாபிமானம் எங்கு செல்லும்? தன்

தேசத்தை மேன்மைப்படுத்தவாவது தன் தேயத்தார்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டாமோ?

**ச்ஞ்சல ஸம்ஹாரி.**—ஆஸிம், கொஞ்சம் நிதானமாயிருந்து நான் சொல்வதை நன்றாய்க் கேள். நீ சொன்னது முழுதும் அறிவு கொண்டன்றோ உண்டாகும். தற்சிநேகமுள்ள முகாந்தரங்களன்றோ தன் தேசத்தை மற்றத்தேசங்களைக் காட்டிலும் மேன்மையாகக் கொள்ளச் செய்யும். தேசாபிமானமும் தன்னயமாகுமன்றோ? தன்னயர்கள் கூடின பூமி புண்ணியபூமியாகாதே! தற்புகழுள்ளவர்களெல்லாம், பாவிகளாதலால், இந்நாட்டார் தம் தேசத்தை மற்ற தேசங்களைக் காட்டினும் மேலாக எண்ணுவதில்லை. அவ்வாறு செய்யப் பிரயத்தனப்படுவதுமில்லை. ஆகையால்தான் இம்மனிதன் தன் கடைசிகாலத்தை அனாதையாயும், சந்தோஷங்கொண்டவனாயும் கழிக்கிறான்.

**ஆஸிம்.**—ஈதென்ன அநியாயம்! இதையும் ஓர் உலகமாக யான் கொண்டது தப்பன்றோ? இங்கு ஓர் புண்ணியச் செயலையும் நான் காண்கிலேனே. எல்லோரும் மிருகங்களைக் காட்டிலும் மேலானவரென்று காண்பிவிக்க ஓர் வித்யாசத்தையும் காணேன். இங்குள்ளவர் தன்னடக்கமொன்றையே புண்ணியமாகக் கொண்டிருக்கின்றனர். ஒருவிதக் கொண்டாட்டமும் இங்கில்லை. வீரத்தன்மை, சிநேகம், அறிவு, தருமம், தயை, தேசாபிமானம் முதலிய மேலான குணங்களில் ஒன்றையும் காணோம். இவர்கள், பாவமென்பது யாதென்று அறியாதவர்களென்பது நியாயமேயென்றாலும், புண்ணியத்தையும் தெரிந்து கொண்டவரல்லர் என்பதற்குக் காரணத்தைக் காண்கிலேன். பாவம் அறியாவிட்டால், புண்ணியமே செய்யவேண்டுவதில்லைபோலும். இனி, யான் இங்கு ஒரு விநாடியேனும் தங்கமாட்டேன். நான் முன்னிருந்த உலகிற்கே செல்ல மிக ஆவலுள்ளவனாயிருக்கிறேன். அப்பூவுலகமே இவ்வுலகத்தைக் காட்டிலும் சிறந்தது. கடவுளின் அறிவை யான் இகழ்ந்தது என் மூடத்தன்மையென்று இப்பொழுது எனக்கு நன்றாய்த் தெரிகின்றது. நன்றியறியாமை, ஏளனம், பகை எல்லாவற்றையும் இனி யான் பொறுப்பேன். பொல்லாங்குனின்றும் யான் அகன்று வாழவும், பாவத்தை மற்றவரிடத்தில் கண்டால் பரிதபிக்கவும், என்னைக் கடவுள் அனுக்கிரஹிப்பாராக."

ஆஸிம் சொல்லிமுடித்த நிமிஷமே, தன் முன் நின்ற சஞ்சல ஸம்ஹாரனென்ற அம்மாய உருவம், சந்தோஷமுகத்தைக்கொண்டு, சூறைக்காற்றில் மறைந்துவிட்டது.

ஆஸிம் பயமும் திகிலுங்கொண்டு, சுற்றிப் பார்த்தபொழுது, தான் இருந்த மாய உலகத்தையே காணோம்; அவ்வுருவமும் தென்படவில்லை. தான் எப்பொழுதும் வழக்கமாய் நின்றுகொண்டிருப்பதுபோல் இருந்தான். தான் சற்றுமுன் ஓர் பாறையில் நின்றுகொண்டு, நம்பிக்கையை விட்டுத் துயரம் கொண்டு தன் உயிரை மாய்க்க எண்ணினானன்றோ? அதே பாறைமேல், வலதுகாலை அப்பாறைக் கப்பாலும், இடது காலைப் பாறைமேல் ஊன்றியவாறும் இருந்தான். சிங்கமானது, ஓர் மானைக் கண்டவுடன் எவ்வாறு பாய நினைத்துப் படுக்குமோ அதுபோல் ஆஸிம் தோன்றினான். தன் நிலைமையைக் கண்டவுடன் சட்டென்று காலை இழுத்துக்கொண்டு, கடவுளின் வல்லமையைப்பற்றி யோசித்தான். ஆஹா! கடவுளின் வல்லமையை யாரால் அறியக்கூடும்! என்ன ஆச்சரியம்! கடவுள் அவன் மனதில், அவ்வளவு அரிய புத்திமதிகள் தோன்றும்படி, அந்த ஓர் விநாடிக்குள் செய்தார்!

ஆஸிம் அம்மலைச் சிகரத்தினின்றும், தன் ஊர்போய்ச் சேர்ந்தான். தன் வீடு போனவுடனே, வர்த்தகத் தொழில்கொண்டு, சுறுசுறுப்பாய் வேலைசெய்து அளவிலாத் திரவியம் சம்பாதித்தான். தனக்குக் கடவுளால் போதிக்கப்பட்ட புத்திமதிகளைக்கொண்டு, சந்தோஷமாக வசித்துவந்தான்.

## ஐரோப்பிய மஹாயுத்தம்

256-பக்கங்கள் : : 58-ஆப்டோன் படங்கள்

ஐரோப்பிய மஹாயுத்தத்திற்குக் காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள், யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், சித்திரப்படங்களுடன் தெளிவாயும் கதைப்போக்காயும் ஸாமான்ய ஜனங்கள்கூட எளிதில் படித்தறிந்து கொள்ளும்படி எழுதப் பெற்றிருக்கிறது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

போதினிச் சந்தாதார்க்கு மாத்திரமே ... ரூ. 1.

உபசரியாத வீட்டிலே உண்ணாதிருப்பதே ஒரு கோடி தனம்.

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

### LADLES' PAGES

கோதை நேடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப் - போத
விளையாட விட்டவன் றன் மேற்செயல் நாடென்றுள்
விளையாடுங் கையாள் மதித்து.

கிழக்கே யுதிக்கும் சூரியன் லோக வியவஹாரங்களைக் கண்டு களித்து, பிரிவுற்ற காதலர் சேரத் தான் தடையாயிருப்பதை எண்ணி மேல்திசை நாடி அப்பொழுது நடந்துகொண்டிருந்தான். எனினும் தனது கிரணங்களின் வெப்பங் குறையாமல் கம்பீரமாகவே வான வீதியில் தனது ஒற்றைக்கால் தேரை யோட்டிக் கொண்டிருந்தான். அது வேகமாக நடப்பினும், அதைக்காட்டிலும் வேகமாகவே நளன் ருதுபர்ணனது தேரைச் செலுத்திக்கொண்டிருந்தான். அதன் வேகத்தின் முன் உலகமே இடம்விட்டுப் பெயர்ந்து அதிசீக்ர கதியில் ஓடுவதாக ருதுபர்ண மஹாராஜனுக்குப் பட்டது. காற்று, அவ்வடங்காக்குதிரைகளால் ஊடுருவப்பட்டு "விஜ்ஸ்" என்று குழலினுமினித்த குரலில் நளனது குதிரை யோட்டும் பெருமையையே பாடிக்கொண்டிருந்தது. அதன் வேகத்தோடே அக்காற்றும் எழும்பி எழும்பிப் பாடுவதைக் கேட்ட, பக்கத்திலிருக்கும் மலையுங் காடும், அருவியும் ஆறும் பிரதித்வனி தந்து ச்ருதி கூட்டும். கண்ணுக்குங் காதுக்கும் ஆநந்தமூட்டும் அவ்வினிய காட்சியைக் கண்ட ருதுபர்ணன் எண்ணுதவெல்லாம் எண்ணி மனப்பால் குடித்து மயங்கிக் கிடந்தான்.

சூரிய வெப்பத்தில் காய்ந்த மேகங்கள் பொற்கொல்லன் களத்திட்ட பொன்போல் அப்போது ஜவலித்துக்கொண்டிருந்தது. வாடியிருந்த மனம் உத்ஸாகம்கொள்ளும்படி, சூரியனது தீட்சணியமும் வரவரக் குறைய, வானம்பாடிகள் முதலிய பறவைகள் கூட்டங்கூடி தமது மகிழ்ச்சியை இனிய குரலில் வெளியிட்டுக்கொண்டிருந்தன. தேனீக்கள் தமது செயலொழிந்து தாமரைப் பள்ளியில் சேர்ந்து குலாவின. ஸாயங்காலத்தில் மலரும் நறிய மலர்கள் தமது வாஸனை தென்றற்காற்றின்மேல் தாவிச் செல்ல இணங்கி விளங்கின. பட்சிக் கூட்டங்கள் தமது ஆசைக்குரியவற்றை நாடிப் பஞ்சரமடைந்தன. இனிய மந்த மாருதம் எங்கும் எழும்பி இனிமை குலாவ வீசியது. படர்ந்தெரியும் அக்னிமலையின் வாயைப்போலச் சூரியன் பூமியைத் தாவி, கருமேகங்களின் தலையிவிட்ட மணியாக விளங்கினான். தன்னைக் கட்டிப் பிணித்த அம்மேகங்களைப் பொருது, இடையிடையே அவற்றைக்காய்ச்சி அவன்தன் கரங்களைக் கண்டவர் கண்மயங்கும்படி வெளிவிட்டுக் கொண்டிருந்தான். தன்னைச் சரணடைந்த தாமரைத் தலைவன், அக்னி குண்டத்தில் வீழ்ந்து அவியாதபடி அந்தர்ப்புவனத்தில் அவனை மறைக்க எண்ணங்கொண்டு விளங்கினள் போலும். அந்த உக்ரசூரியனை மறைத்த பூமாதேவி அப்போது பாற்கடல்வந்த திங்கள் மன்னவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் ருதுபர்ணனுடையதேர் விதர்ப்பபுரத்துள் பிரவேசஞ்செய்தது. அப்போது அந்நாட்டுக் கொடி, அதனுள் வருவாரை உள் வாவென அழைப்பதுபோலப் பறந்து கொண்டிருந்தது. அத்தேரோடும் ஓசையைக் கேட்ட தமயந்தி, 'அது என் நாதன் தேரோட்டும் ஒலியில்லாவிட்டால், வேறென்னவா யிருக்கக் கூடும்? அப்படி யில்லாவிட்டால், என்னையே நான் நம்பமுடியாது!' என்று வியந்துகொண்டிருந்தாள்; அப்போதவள் இடது தோள்கள் துடித்தன.

நிற்க, ருதுபர்ணன் மனங்குன்றிக் கிடந்தான். தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரமெனத் தான் கேள்விப்பட்டது உண்மையோ யில்லையோ என அவன் கவலைகொண்டான். "அவளுக்கு இரண்டாம் சுயம்வரமென்றால், இவ்வூர் ஏன் அலங்கரிக்கப்படவில்லை? ஏன் இப்படி இந்த ஊர் நிச்சப்தமாகக் கவலைகொண்ட வீடுபோல விளங்கவேண்டும்? ஜனங்கள் ஏன் சிறிதும் உத்ஸாகமில்லாமல் இருக்க வேண்டும்? வரக்கூடிய பெருங் கொண்டாட்டத்தை ஆவலோடு அவர் எதிர்பார்ப்பதுபோல் தோன்றவில்லையே" என அவன் சிந்தையிலாழ்ந்திருந்தபோது, தேர் குண்டினபுரத்து அகநகருள் பிரவேசிக்க, காவலாளர்கள் ருதுபர்ணரது வரவை விமராஜனுக்குத் தெரிவித்தனர். அவரது உத்தரவை ஏற்று, தேரை உள்புகும்படி அவர் விட்டனர். உடனே நளமன்னவர் வெகு லாகவமாக அத்தேரை அக்

உபசார வார்த்தை காசாகுமா, உண்டாலொழியப் பசிதீருமா

குண்டினபுரத்து ராஜவீதியில் செலுத்தி, வீமராஜனது ஸபாமண்டபவாயிலில் நிறுத்தினர்.

அத்தேர் அவ்வீதிவழி ஓடியபோது செய்த அழகிய இனிய சப்தம் அவ்வூர் முழுதையுங் கவிந்து கொண்டது. அவ்வொலி காதில் பட்டதும், தமயந்தி "என் தலைவரது கைலாகவத்தையே அந்தச் சப்தம் வெளியிடும். இல்லாவிடில் யான் அவரை அறிந்தும் அறியாதவள் ஆவேன். என் கணவர் இங்கு வந்துவிட்டாரெனவேயான் இனி நிச்சயித்துவிடலாம்; நிச்சயித்துவிட்டேன். மழைக்காலத்தில் அதி கம்பீரமாக ஒலிக்கும் மேக முழக்கம்போல விளங்கும் அச்சப்தம் என்நாதர் குதிரையோட்டும் வேகத்தின் முன்னுரை யல்லாவிட்டால், மற்றெதுவா யிருக்கலாம்? அது என்னவாயிருந்தாலென்ன? என் தலைவனது ஞாபகத்தையூட்டி நல்லெண்ணத்தை யுண்டாக்கிய அந்த நாதம் என் மனத்தைக் கவர்ந்து கிளைக்குமாறு செய்கிறது. அவ்வாறு என் உள்ளங் குளிரும்படி நாதஞ்செய்யும் இந்தத் தேரை ஓட்டுபவர் என் நாதனே; மற்றெவரு மிருக்கமுடியாது. என் உயிர்க்குயிராக விளங்கும் என் ஐயனை இன்று யான் காணாவிட்டால் நான் பிழைத்திரேன் என்பது நிச்சயம். வீரருள் பெரியவரும், அதோ எதிரில் விளங்கும் சந்திரனைக் காட்டிலும் நிஷ்களங்கமான மனத்தைக் கொண்டவரும், புகழையே பெருஞ் சுமையாகக் கொண்டவரும், தவறில் படாத நெறியினருமான என் உயிர் நண்பரை இன்றுநான் காணேனானால், கெடுவேன் என்பது சொல்லவும் வேண்டுமோ? அவர் மெல்லிய கைகளில் பதுங்கி, அவர் முகத்தினழகை யான் இன்று கண்டு களிக்கேனானால், இனிப் பிழைத்த லரிது. இக்கண்கள் அவரை நேரில் காணும் பாக்கியத்தைப் பெறாவிடில், இவ்வுடல் பொன்போல் ஒளிரும் நெருப்பிற் கிரையாகும்; இது ஸத்யம். ஆர்ய புத்ரா! புகழே வடிவெடுத்தோய்! மத்த கஜங்களை யடக்கியாளும் மன்னவரேறே! நரச் சிரேஷ்டரே! உமது திருமேனி தீண்டப் பெற்றும் பெற்றிலேனான யான் உம்மை இந்நாள் காணேனானால், ஸந்தேகமில்லாமல் பிராயோபவேசஞ் செய்வேன் என்பதை நம்பும். தாங்கள் என்றாவது பொய் பேசியதுண்டோ? அன்றி எவர்க்காவது பொல்லாங்கு செய்ததுண்டோ? விளையாட்டிற் கென்றாவது தகாத வார்த்தைகள் சொல்லியதுண்டோ? நீர் எப்பொழுதும் பெருந்தன்மை யுள்ளவர்; பொறுமை கொண்டவர்; வல்லமையுடையவர்; உத்தம சீலமுள்ளவர்: மறைவிலும் பழியான காரியம் ஒரு நாளுஞ் செய்யாதவர்; யாரிலும் அதிகமாகக் கொடை யளிப்பவர்; மனநிலை கோணா நடுநிலைமை வாய்ந்தவர்; உத்தமருள் உத்தமர்; குணமாகிய கவசத்தைப் பூண்டவர். நெடுந் தோளாய்! உம்மைக் காணவேண்டுமெனப் பேராவல் கொண்ட இக்கண்களோ பூத்துப் போயின. எனினும், உமது உத்தம குணங்களைச் சரிவர வர்ணிக்கமுடியாது, என் மனம் மயங்குகிறது. அவை அளவு கடந்தவன்றோ! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாவதைத் தவிர்த்து என்னை ஆள இன்று நீர்வராவிடில், நான் பிழைப்பேன் என்று எனக்குத் தோன்றவில்லை. துக்கத்தின் மிகுதியால் என் உள்ளம் பிளந்துவிடும். உம்மையல்லாமல் மற்றுயாரை இச்சமயம் யான் சரண் புகுவது? எல்லா உலகமும், ஸுகமும் உம்மிடமன்றோ எனக்குள்ளன? யான் வாழ விரும்புமிடம் அதுவன்றோ? அதை யான் பெறாவிடில் அந்தர பாதளத்துள் வீழ்ந்த அவிவேகியாகு மல்லவோ? ஆயினும் எனக்கும் தெரியாமல் நீர் வந்தெனைக் காப்பீர் என்ற பூர்ண நம்பிக்கை என்னுள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது. அது எப்படி முடியுமோ யான் அறியேன்" என மொழிந்துகொண்டு, பித்தம் பிடித்தவள்போல மேல்மாடி மீதேறித் தேருள் இருந்தவரை ஆவலோடு நோக்கினாள். தேரிலிருந்து வார்ஷ்ணேயனும் வாகுகனும் முதலில் இறங்கப் பின் ருதுபர்ணன் இறங்குவதைத் தமயந்தி கண்டாள். சிப்பந்திகள் ருதுபர்ணனை வரவேற்று ராஜசபைக் கழைத்துச் சென்றனர். வாகுகனும் வார்ஷ்ணேயனும் குதிரைகளை அவிழ்த்துவிட்டுத் தேரை ஒரு பக்கமாக நிறுத்தி ருதுபர்ணரது வரவை எதிர்பார்த்திருந்தனர்.

---

**ஸ்ரீராமாயண ஸாரம்:**—எளிய நடையில் மிக இனிமையாக எழுதப் பட்டுள்ளது. கல்லூரி மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் இது பெரிதும் பயன்படுமென்பது எமது உறுதியாதலின் இதனை அவரெல்லாம் வாங்கி வாசித்தற்குரியர்.—தேசபக்தன் விலை ரூபா, 1. சந்தாதாரர்க்கு மாத்திரம் அணா. 12.

---

உபாயத்தால் ஆகிறது பராக்கிரமத்தால் ஆகுமா?

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**யுத்த முடிவும் ஸமாதானச் சபையும்.**

இம்மஹா யுத்த இருள் ஒழிந்து சமாதானச் சூரியன் எப்பொழுது கிளம்பும் என ஆவல் கொண்ட இவ்வுலகம் மன அமைதி அடையும்படி அக் கொடுமையே உருவெடுத்த கெய்ஸர் தனது அரசுரிமையைத் துறந்து எங்கும் குதூஹலம் குலவ ஜர்மானியர் நேசப்படையினரைச் சரணடையும்படி செய்த கடவுளின் கிருபைக்கு யாம் என்றும் கடமைப் பட்டவராவோம். நல்லது விதைத்தால் நல்லது விளையும், அல்லது விதைத்தால் அல்லதே விளையும் என்பதற்கு இப்பேராசைப்பேயாலாட்டப்பட்டகெய்ஸரின் பிழைப்பே படிப்பினையாகும். நிற்க, இந்த யுத்தம் நமது அதிமாட்சிமை தங்கிய அரசர் தொடங்கும்பொழுதே, தர்மயுத்தமென நாம் கூறியதை மீண்டும் வற்புறுத்துவது தவருகாது. அது எளிய ஜனங்களின் உரிமைகளைப் பாராட்டி வலிய அரசரும் கவனிக்கவென்றே செய்யப்பட்டது; அவ்வித முடிந்த நிலையை நிலை நிறுத்தவே முடிந்தது. இவ்வாறு நம்மரசர் வெற்றியுடன் வருவதற்கு இந்திய நாடு செய்த உதவி அளவிடத் தகுத்த தல்லவென கனம் மந்திரியாரே கூறியிருக்கின்றனர். பல நிர்ப்பந்தங்களுக்குள்பட்டும் தமது உடல் பொருள் ஆவி யாவையும் தந்துதவியது நம்மவரது கடமை எனினும், அவ்வாறு உதவியவர்களுடைய பல துன்பங்களையும் போக்கி, லோகத்தாரோடு ஸம உரிமையுடன் அவர் விளங்குமாறு செய்வது பிரிட்டிஷ் மக்களது நன்றியறியும் தருமமாத்திரமன்று;கடமையுமாகும். அவ்வாறு செய்யாவிடில், தர்ம ஸ்தாபனத்திற்கென்றே யவர்போரிட முந்தினரென்ற புகழுக்குக் களங்க மேற்பட்டுவிடுமல்லவா ? இனி வரும் ஸமாதானச் சபையில் பாராட்டிக் கவனிக்கப்படும் ஸ்வயநிர்ணய மென்னும் உரிமையை, ஆங்கிலநாட்டின் ஜீவரத்தினமாகி விளங்கும் இந்நாட்டிற்கும் பொருந்துமாறு செய்வரென நம்புகின்றனம். ஸமாதானக் கான்பரன்ஸில் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் பெற்ற இந்தியப் பிரதிநிதிகளாய்ச் சென்றிருக்கும் கனம் ஸர். எஸ். பி. ஸின்ஹாவும், பிகானிர் மஹாராஜாவும் இந்நாட்டு லக்ஷியங்களைச் சிறிதும் அடங்காத்தீரத்தோடும் தாராளமான மனத்துடனும்,தமது விருப்புவெறுப்புக்களைக் கவனியாது அங்கு வெளியிட்டு வாதிப்பர் என்ற நமது நம்பிக்கையை அவர் மெய்ப்பிப்பாராக !

* * *

**இங்கிலாந்தில் இந்திய பத்ரிகாசிரியர்கள்.**

மாட்சிமை தங்கிய அரசர் பெருமானது அழைப்புக்கிணங்கி, சேனை விஷயங்களைக் கவனிக்கச் சென்ற நமது பத்ரிகாசிரியர்கள் இங்கிலாந்தில் பல விதத்தில் மரியாதை செய்யப்பட்டதன்றி அரசராலும் பேட்டி கொடுக்கப்பெற்றனரென்பதைக் கேட்சக்கேட்ச நமக்கு இனி மேலும் மேலும் நல்ல காலம் ஏற்படுமென்ற குதூஹல முண்டாகின்றது. இப்பத்திராதிபர்கள் பல விடத்திலும், இந்திய நாட்டாரால் நடத்தப்படும் பத்திரிகைகளுக்கும் அச்சுச்சாலைகளுக்கும் உள்ளவெறுக்கத்தக்க நிபந்தனைகளை ஒழிக்கும்படி பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர்களையும் பொது ஜனங்களையும் தமக்கு உதவிசெய்வது அளவு கடந்த நன்மை கொடுப்பதன்றி நியாயமான உரிமையை நிலைநாட்ட வழிதேடுவதுமே யாகுமெனக் கூறியது கவனிக்கத்தக்கதே யன்றோ? விரும்பினல் அவர் என்ன உதவி செய்வரென்பது நாம் அளவிட முடியுமா ?

* * *

**ஆகாய விமானப் பிரயாணம்.**

யுத்தத்தினலும் சில நன்மைகள் ஏற்படும் என்பதற்கு ஆகாய விமானங்கள் மூலமாக இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் போக்குவரத்து ஏற்படுத்தச் செய்யும் பிரயத்தினமொரு சான்று. இதனல் கடல் வழிப்போவதால் ஏற்படும் மூன்று வாரப் பிரயாணம் ஒரு வாரத்துக்குள் ஆய்விடுமெனத் தெரிகிறது. ஆகாய விமானங்களை இறக்கத் தக்க இடங்களை ஏற்படுத்த, இப்போது பரிசோதனைகள் இந்தியாவிலும் பர்மாவிலும் நடந்து வருகின்றன. முதல் முதல் இப்பிரயாணம் கடிதப் போக்கு வரத்துக்கே உபயோகப்படுத்தப் படுமானலும் காலக்ரமத்தில் பிரயாணிகளுக்கும் உதவியாகும் என நாம் நம்புகிறோம்.

உப்பு இருந்த பாண்டமும், உபாயம் இருந்த நெஞ்சமும் தட்டி உடையாமல் தானே உடையும்.